21st January 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 15 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com



**ஜனாதிபதி தேர்தலில் இருந்து ஒதுங்கும் தம்மிக்க பெரேரா**

(ஐ.ஏ. காதிர் கான்)

ஜனாதிபதித் 03ம் பக்கம்பார்க்க...

# தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக ஸ்ரீதரன்

## ஸ்ரீதரனுக்கு 184 சுமந்திரனுக்கு 137

### இணைந்து பணியாற்றுவோம்; இருவரும் உறுதி



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக 02ம் பக்கம்பார்க்க...

## ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் இலங்கை வருகிறார்



றொட்டரி இன்டர்நெஷனல் தலைவர் கோர்டன் ஆர். மிக்னலி நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கை வருகிறார்.

இந்த விஜயம் றொட்டரி இன்டர்நெஷனலுக்கும் இலங்கை சமூகத்துக்கும் முக்கியம் வாய்ந்ததாக அமையுமென ஹொட்டரி 02ம் பக்கம்பார்க்க...

## தெஹிவளை பாபக்கர் பள்ளி நிர்வாகத்தின் வேண்டுகோள்

பாபக்கர் டிரஸ்ட் மற்றும் பாபகர் மஸ்ஜிதின் பதிவுகள் முடிவுற்ற விடயம். இது தெஹிவளை அத்தபத்து வீதியில் அமைந்துள்ள பாபக்கர் நிலையம் இதனோடு 02ம் பக்கம்பார்க்க...

## ரணிலை வெல்ல வைக்க புதிய கூட்டணி உதயம்

**இம் மாதம் 27ல் முதல் கூட்டம்** 02ம் பக்கம்பார்க்க...



## சிறுபான்மையினர் என்பதற்காக எங்களை அடக்கி ஒடுக்க முடியாது

### வீறு கொண்டெழுந்ததால் நடுங்கும் வல்லரசுகள்

### இந்திய முஸ்லிம் லீக் நிகழ்வில் ஹக்கீம் காட்டம்



நெருக்கடிகளை சிறுபான்மையினர் எல்லா இடங்களிலும் சந்திக்கின்றோம். சிறுபான்மை என்பதற்காக எங்களை சிறுமை படுத்தி எங்களை ஒடுக்கி ஆள இந்த நவீன யுகத்தில் எவருக்கும் அருகதை கிடையாது. 15ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த மேலைத்தேயம் எங்களுடைய நாடுகளை ஆக்கிரமித்து, வளங்களை சூரையாடி, போதாக்குறைக்கு இந்த நவீன யுகத்திலும் இஸ்ரேல் என்ற பெயரில் ஒரு பலவந்த குடியேற்றத்தின் ஊடாக பயங்கரவாதத்தை 02ம் பக்கம்பார்க்க...

## உலகின் செல்வம் கொழிக்கும் எமிரேட்ஸ் ஆட்சியாளர் குடும்பம்



உலகின் பணக்கார குடும்பங்களின் பட்டியலில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் குடும்பம் முதலிடத்தில் உள்ளது.

இந்த குடும்பத்திடம் 700 சொகுசு கார்கள் 8 ஜெட் விமானங்கள் உள்ளது.

உலகின் பணக்கார குடும்பங்களின் பட்டியலில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் ஷேக் முகம்மது பின் சையத் அல் நஹ்யான் குடும்பம் முதலிடத்தில் உள்ளது.

அல் நஹ்யான் 2022-ம் ஆண்டு ஒட்டுமொத்த ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைவராக பொறுப்பேற்றார். ஐக்கிய அரபு அமீரகத் தலைநகர் அபுதாபியில் உள்ள கஸ்ர் அல்-வதன் மாளிகையில் நஹ்யான் குடும்பத்தினர் 02ம் பக்கம்பார்க்க...

## பணம் செலுத்தியவர்களுக்கு மட்டுமே ஹஜ்ஜில் முன்னுரிமை



புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக விண்ணப்பித்தவர்களில் பணம் செலுத்தியவர்களுக்கே முன்னுரிமை 02ம் பக்கம்பார்க்க...




உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## சிறுபாண்மையினர்...
(முன் பக்கத் தொடர்ச்சி)

மத்திய கிழக்கில் இன்று கட்டவிழ்த்து விட்டு இருக்கின்ற நிலையில் இந்த உலகின் அரசியல் சமன்பாடு தலைகீழாக மாறிக் கொண்டிருக்கின்றது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தமிழகம், தஞ்சை மாவட்டம், பாபநாசத்தில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் திருச்சி மண்டல பயிலரங்கில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, "சர்வதேச உறவுகளில் முஸ்லிம் சமூதாயம்" என்ற தலைப்பில் உரையாற்றச் சொன்னார்கள். இன்று எமக்கு ஏன் சர்வதேச உறவு ? என்று கேட்கத் தோன்றுகின்றது. பலஸ்தீனத்தில் நடக்கின்ற அரக்கத்தனமான தாக்குதல்களைத் தடுக்க முடியாத சர்வதேசத்தில் எமக்கு என்ன கிடைக்கப் போகின்றது ? என்ற அங்கலாய்ப்போடு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இப்படியான அநியாயங்களுக்கு ஆங்காங்கே இன்று துணை போகின்ற சக்திகளோடு உறவாடிக்கொண்டிருக்கின்ற எங்கள் அரசாங்கங்களைப் பற்றி உங்களுக்கு எதற்கு இந்த உறவு என்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றோம். ஏன் ,இந்த அரக்கத்தனமான ,மிலேச்சத்தனமான, எந்த மனிதாபிமானமுமற்ற இந்த நடத்தைகளை கண்டித்து எதுவுமே செய்ய முடியாமல் மௌனித்து போய் இருக்கின்ற ஆட்சியாளர்கள் நிறைப் பேர் இருக்கின்ற உலகில் மனிதநேயம் எங்கே போய் விட்டது என்று இருக்கின்ற ஒரு கட்டத்தில்தான் நாங்கள் எதற்கு இந்த சர்வதேச உறவுகள் ?என்று கேட்கின்றோம்.

முதலில், இன்று இந்த சியோனிஸ அரக்கர்களுக்கு துணையாக இருக்கின்ற மேலைத்தேய நாடுகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். சர்வதேசத்தை ஆட்டி படைத்துக் கொண்டிருந்த வல்லரசுகள் இன்று செய்வதறியாமல் தடுமாறிப் போய் இருக்கிறார்கள்.

20 வருடங்களாக ஆப்கானிஸ்தானில் செய்யக்கூடிய அநியாயங்கள் அட்டூழியங்கள் அனைத்தையும் செய்து ஈற்றில் வாலை சுருட்டிக் கொண்டு ஓட வேண்டிய நிர்க்கதி நிலைக்கு உள்ளான இந்த அமெரிக்கர்கள், இன்று உக்ரைனில் வேண்டுமென்றே யுத்தத்தையும் உருவாக்கி, அந்த யுத்தத்தினால் இன்று முழு உலகிலும் விலைவாசிகள் அதிகரிக்கின்ற ஓர் ஆபத்தை ஆக்கித்தந்து, இன்னுமின்னும் அந்த யுத்தத்திற்கு கோடிக் கணக்கில் தனது நாட்டு மக்களின் வரிப்பணத்தை வாரி இறைத்து, போதாக்குறைக்கு ஈனத்தனமாக, ஈவிரக்கமில்லாமல் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளையும், பெண்களையும், வயோதிபர்களையும் கொன்று குவிக்கின்ற இஸ்ரேலர்களுக்கு அனைத்து ஆயுத பலத்தை யும் கொடுத்துதவி, இன்னும் இவர்களா ஏக வல்லரசு என்று சொல்லிக் கொள்வது? இவர்களுக்கு உடந்தையாக எவர் இருந்தாலும் எந்த அரசு இருந்தாலும் அவர்களை இறைவனின் சாபம் சும்மா விட்டுவிடாது என்பதையும் நான் இங்கு சொல்லியாக வேண்டும்.

எனவேதான், பாரத பிரதமர் சார்பிலே ஈரானோடு பேச்சுவார்த்தை நடப்பதாக நேற்றுப் பார்த்தேன். ரஷ்ய அதிபரோடு பேச்சு வார்த்தை நடக்கிறது. இதைத்தான் பாரதம் செய்ய வேண்டும். ரஷ்யாவோடு கூட்டு வைக்க வேண்டாம் என்று அமெரிக்கா சொன்னதையும் கேட்காமல் ,அந்த உறவை பேணுகிறார்கள். இந்த நடுநிலை பேணப்பட வேண்டும். அது மட்டுமல்ல. சீனாவோடும் பகைமை பாராட்ட வேண்டிய அவசியமில்லை. இது "ஆசியாவின் யுகம்" என்று சொல்கின்றார்கள். உங்களுடைய வெளியுறவுத்துறை அமைச்சர் நண்பர் ஜெய்சங்கர் "இந்தியாவும் சீனாவும் கூட்டு சேரவில்லை என்றால், ஆசியாவின் யுகம் சாத்தியமாகாது" என்கிறார்.அவர் யதார்த்தத்தை பேசுகின்றார். அந்த யதார்த்தத்துக்கு அவர் உயிர் கொடுக்க வேண்டும். இந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஏமாற்று வித்தைகளுக்கு இந்தியா சோரம் போய்விடக் கூடாது. ஏன் என்றால் பாரதம் சாமானியமான ஒரு தேசம் அல்ல.

மத்திய கிழக்கில் மாத்திரம் ஏறத்தாழ 10கோடியை அண்மித்த எம்மவர்கள் தொழில் செய்து கொண்டிருக்கின்றார்கள். இதில் 60சதவீதத்தினர் தங்களுடைய உடலை வருத்தி, வியர்வை சிந்தி உழைக்கின்ற இந்த பாரதத்தின் மக்கள். அதில் 20 சதவீதமானவர்கள் தொழில்வாண்மை பெற்றவர்கள்.

பல்வேறு துறைகளில் தேர்ச்சி அடைந்தவர்கள். 20 சதவீதம் என்பது ஒரு சாமானிய பங்கல்ல. கிட்டத்தட்ட 2 கோடிக்கும் மேற்பட்டவர்கள். இன்று மத்திய கிழக்கு நாடுகளில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள்.

இவர்கள் உழைத்து அனுப்புகின்ற பணமாக மாத்திரம் 35 பில்லியன் டொலர்கள். வருமானமாக பாரதத்துக்கு வருகின்றது. இப்படி இருக்கின்ற நிலையில் இஸ்ரேலோடு எங்களுக்கு என்ன உறவு தேவை? இத்தனை பிரச்சினைகளுக்கும் மத்தியில் உங்களது நாட்டின் வெளியுறவு கொள்கையை பற்றி பேசுவதற்கு எனக்கு அருகதை கிடையாது. ஆனால், சில யதார்த்தங்களை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். பாகிஸ்தானில் குவார்தா என்ற ஒரு துறைமுகம் சீன உதவியோடு கட்டப்படுகின்றது - என்றார்.

## பணம்...
(முன் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கப்படுமென்று முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் ஆப்தீன் தெரிவித்தார்.

25 ஆயிரம் ரூபா பதிவுக்கட்டணமாக செலுத்தியவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுமென்றும், அப்பணம் பின்பு திருப்பி கையளிக்கப்படுமென்றும் பணிப்பாளர் தெரிவித்தார். மேலும் 500 பேருக்கு ஹஜ் செய்ய அனுமதி வழங்குமாறு புத்தசாசன சமய விவகார கலாச்சார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சவுதி அரேபிய ஹஜ் விவகார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## தெஹிவளை...
(முன் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புபட்ட பாபக்கர் டிரஸ்ட் மற்றும் பாபக்கர் மஸ்ஜிதின் பதிவுகள் வக்பு சபையில் பதிவுசெய்யப்பட்ட விடயமாகும். என்றாலும் இது இதுவிடயத்தில் உண்மைக்கு புறம்பான இட்டுக்கட்டப்பட்ட பல்வேறு பதிவுகளை ஒரு சில சமூக வலைத்தளங்களில் எந்த அடிப்படை ஆதாரங்களும் இன்றி பதிவிட்டு வருகின்றனர். இது குறித்து பொறுப்பு வாய்ந்த சபை என்ற வகையில் ஏற்கனவே கொழும்பு பள்ளிவாயல்களின் சம்மேளனம், தெஹிவளை பள்ளிவாயல்களின் சம்மேளனம், மற்றும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் கவனத்துக்கு கொண்டு சென்று அவர்களது ஆலோசனைகளும் பெறப்பட்டன. இந்நாட்டின் உயர் சபைகளில் ஒன்றான வக்பு சபை சகல விடயங்களையும் அவதானித்து சட்டரீதியான முறையில் பதிவினை மேற்கொண்டு இந்த சொத்தின் உரிமையாளரின் அனுமதியுடன் நம்பிக்கையாளர் சபை ஒன்றும் நியமிக்கப்பட்டது. இது தொடர்பான முழுமையான மேலதிக ஆதாரங்களுடன் அடுத்து வரும் இதழ்களில் எதிர்பாருங்கள்.

## தமிழரசுக்...
(முன் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இன்று (21) காலை கட்சியின் பொதுக்குழுக் கூட்டம் ஆரம்பமாகிய நிலையில், தலைவருக்கான இரகசிய வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதில் அக்கட்சியின் புதிய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் 184 வாக்குகளைப் பெற்று தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு எம்.ஏ.சுமந்திரன் 137 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

கட்சியின் தலைவர் பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிட்ட நிலையில், கூட்டத்தின் ஆரம்பத்தில் சீ.யோகேஸ்வரன் போட்டியிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது.

புதிய தலைவர் எதிர்வரும் 28ஆம் திகதி இடம்பெறும் கட்சியின் தேசிய மாநாட்டின் போது உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்பார் என இலங்கை தமிழரசு கட்சி செயலாளர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தலைவராக தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீதரன் எம்பி அங்கு கருத்து தெரிவிக்கும் போது, சகலரும் ஒன்றுபட்டு தமிழர் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு திட சங்கற்பம் பூண வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

## ரொட்டரி...
(முன் பக்கத் தொடர்ச்சி)

கழகம் தெரிவித்துள்ளது. 225 நாடுகளில் 35 ஆயிரம் ரொட்டரி கழகங்கள் இருக்கின்றன. இவை சர்வதேச ரீதியாக பல மக்கள் நல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. இந்த நான்கு நாள் விஜயம் மூலம் ரொட்டரி இன்டர்நெஷனலுக்கும், இலங்கை சமூகத்துக்குமிடையே உறவு பலப்படுமென தெரிவிக்கப்படுகின்றது. தலைவர் கோர்டன் ஆர். மின்னலி நான்கு நாள் விஜயத்தை சினமன் க்ரேன்ட் ஹோட்டலில் நடைபெறும் ரொட்டரி இளைஞர்களுக்கான சொற்பொழிவுடன் ஆரம்பிப்பார். ரொட்டரி இன்டர்நெஷனல் இலங்கைக்கு சுகாதார உதவிகளை வழங்குவதற்கான ஒப்பந்தத்தையும் சுகாதார அதிகாரிகளுடன் மேற்கொள்ளவுள்ளார். அவரது விஜயம் இலங்கைக்கு புதிய எதிர்பார்ப்புக்களை வழங்குகின்றது.

## ரணிலை...
(முன் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியாகும் முதலாவது கூட்டம் ஜா-எலயில்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் புதிய கூட்டணியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முதலாவது கூட்டம் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவின் ஏற்பாட்டில் ஜா-எல நகரில் நடைபெறவுள்ளது.

அனுர பிரியாதர்ஷன யாப்பா, சுனில் பிரேமஜயந்த, நிமல் லன்சா, நளின் பெர்னாண்டோ ஆகியவர்கள் உட்பட மொட்டுக் கட்சியின் பல உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர். தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்தரிக் கட்சி, இலங்கை கொமியுனிஸ்ட் கட்சி, டளஸ் அழகப்பெரும, ரொஷான் ரணசிங்க ஆகியோரை உள்ளடக்கிய புதியதொரு முன்னணி உருவாக்கப்படவுள்ளது. இலங்கை கமியுனிஸ்ட் கட்சியின் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவிக்கின்ற தகவலின் படி இந்த கூட்டணியை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகள் இப்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாக கூறினார். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள

## உலகின்...
(முன் பக்கத் தொடர்ச்சி)

வசித்து வருகின்றனர். ரூ.150 பில்லியன் மதிப்பில் இந்த மாளிகை அமைந்துள்ளது. இங்கு அல் நஹ்யானின் 18 சகோதரர்கள், 11 சகோதரிகள், 9 குழந்தைகள், 18 பேரக் குழந்தைகள் என 56 பேர் வசிக்கின்றனர். இந்த மாளிகையில் 3,50,000 படிகங்களால் ஆன சர விளக்கு, மற்றும் மதிப்புமிக்க பல வரலாற்று கலைப்பொருட்களும் உள்ளன.

இக் குடும்பத்திடம் 700 சொகுசு கார்கள் மற்றும் 8 ஜெட் விமானங்கள் உள்ளது.

உலகின் மொத்த எண்ணெய் வளத்தில் நஹ்யான் குடும்பத்தின் வசம் மட்டும் 6 சதவீதம் உள்ளது. உலகின் மிகப் பெரிய நிறுவனங்களில் இக்குடும்பத்தினர் முதலீடு செய்துள்ளனர். பாடகி ரிஹானாவின் அழகுசாதன நிறுவனமான பென்டி, எலான் மஸ்கின் ஸ்பேஸ் எக்ஸ் என பிரபல நிறுவனங்களில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளனர். அதிபரின் சகோதரரான தஹ்னூன் பின் சயீத் அல் நஹ்யான், குடும்பத்தின் தலைமை முதலீட்டு நிறுவனத்திற்கு தலைமை தாங்குகிறார். இதன் மதிப்பு கடந்த 5 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 28 ஆயிரம் சதவீதம் உயர்ந்துள்ளது. இந்நிறுவனம் விவசாயம், எரிசக்தி, பொழுதுபோக்கு மற்றும் கடல்சார் வணிகங்களில் ஈடுபட்டு வருகின்றது.

இங்கிலாந்தின் பிரபலமான கால்பந்தாட்ட குழுவான மான்செஸ்டர் சிட்டியை ரூ.80 பில்லியன் க்கு அல் நஹ்யான் குடும்பம் 2008-ம் ஆண்டு வாங்கியது.

ஐக்கிய அரபு எமிரேட்சை தவிர துபாய், பாரிஸ் மற்றும் லண்டன் உட்பட உலகம் முழுவதும் ஆடம்பர சொத்துக்களை இக்குடும்பத்தினர் வைத்துள்ளனர்.




# ஐந்து ஆண்டுகளில் சுதந்திர சுதந்திர பலஸ்தீன் உருவாகவேண்டும் அணிசேரா மாநாட்டில் ஜனாதிபதி ரணில் பிரேரணை




அடுத்த ஐந்து ஆண்டுகளில் சுதந்திர பலஸ்தீன இராஜ்ஜியம் உருவாகவேண்டுமென இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து பலஸ்தீன இராஜ்ஜியம் உருவாக்கப்படவேண்டுமென உடக்ண்டாவில் நடைபெறும் 19ஆவது அணிசேரா மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாம் கூடியுள்ள இச்சந்தர்ப்பத்தில் மனித அபிமான நெருக்கடி காஸாவிலே மிக மோசமான நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மூன்று மாத காலமாக பலஸ்தீன சிவில் மக்கள் பெரும் துன்பங்களை எதிர்கொண்டுள்ளனர். அணிசேரா அமைப்பு இது குறித்து பெருமளவில் அமைதி காக்கின்றது. நாம் எவ்வாறு இந்த அழிவுகளைப் பார்த்து அமைதியாக இருக்கலாம். இம்மனிதர்களுக்கு மனிதாபிமான உதவிகள் மறுக்கப்பட்டுள்ளன. இங்கே படுகொலை செய்யப்படுபவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்களாவர். அமைதி காப்பதென்பது அதற்கு இணக்கம் தெரிவிப்பதாகவே கருதப்படுகின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். 123 நாடுகிளல் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்கள்.

## ஒருமைப்பாட்டு இயக்கம் தென்னாபிரிக்காவுக்கு நன்றி

இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ள தென்னாபிரிக்காவின் உறுதியான நிலைப்பாட்டை நாங்கள் பாராட்டுகின்றோம். சர்வதேச சமூகம் ஏற்கனவே இந்த யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. இஸ்ரேலை தனி நாடாகக் கருதி இரு நாட்டுத் தீர்மானம் அமைவது மூலம் பலஸ்தீனம் இல்லாமல் இது சாதகமான தீர்மானமாக அமையாது.






பாலஸ்தீனத்தை ஆதரவாக வெள்ளியன்று மாலை கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பாலஸ்தீனம் தூதுவர் கலாநிதி ஹம்தல்லா சுஹைதர் மிளகுவர்த்தி ஏந்தி ஆதரவு தெரிவிப்பதனைப் படத்தில் காணலாம்.அருகில் ஏற்பாட்டளர்களான ரிஸ்வி, சாமில் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

### ஜனாதிபதி...

(முன் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலில் இருந்து தற்காலிகமாக விலகுவதற்கு, தொழிலதிபர் தம்மிக்க பெரேரா தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர், ஊடகங்களில் பிரசாரம் செய்து வருவதைக் கருத்திற்கொண்டே, தம்மிக்க பெரேரா தனது தேர்தல் பிரசாரத்தை தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிடத் தயார் என, வர்த்தகர் தம்மிக்க பெரேரா முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக்க பெரேராவை நிறுத்த எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JANUARY 21
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இனவாத சவாலை வெற்றிகொண்ட ஹிஸ்புல்லாஹ்

கிழக்கின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவரான கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வினால் புனாணையில் ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப பல்கலைக்கழகம் சில தினங்களுக்கு முன் இயங்க ஆரம்பித்துள்ள மகிழ்ச்சியான செய்தி வெளியாகியுள்ளது.

இனவாதிகளின் பார்வைக்குள் சிக்கி பல வருடங்களாக தடைப்பட்டிருந்த ஐ.சி.எஸ்.டீ. பல்கழைக்கழகம் நாட்டின் தனியார் பல்கலைக்கழகமாக இயங்கவுள்ளது. 18ஆம் திகதி சுமார் 700 மாணவர்களை உள்வாங்கி இப்பல்கலைக்கழகம்தனதுகல்விநடவடிக்கைகளைவைபவரீதியாகஆரம்பித்தது. முன்னாள் ஆளுனர் ஹிஸ்புல்லா கிழக்கு மாகாணத்தை இலக்காகக் கொண்டு ஆரம்பித்த இப்பல்கலைக்கழகத்திற்கு சவூதி அரேபிய ஷேக். அலி அப்துல்லாஹ் அல் ஜுனைதி தர்மநிதியம் முதலீடு செய்தது. பட்டதாரி மாணவராக இருக்கும் போது அரசியலுக்குள் பிரவேசித்த ஹிஸ்புல்லாஹ் தமது பிரதேச மாணவர்கள் உயர் கல்வியை கற்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உணர்ந்து பல்கலைக்கழகமொன்றை அமைப்பதில் ஆர்வம் கொண்டு சவூதி அரேபிய ஷேக். அல் அப்துல்லா ஜுனைதியின் ஆதரவுடன் இப்பல்கலைக்கழகத்தை 2018 இல் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருந்தார். அதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு கட்டட நிர்மாண வேலைகளும் முடிக்கப்பட்டிருந்தன.

இதற்கிடையில் நாட்டில் தலைதூக்கிய இனவாதச் செயற்பாடுகளின் விளைவாக இப் பல்கலைக்கழகத்துக்கும் இனவாத சாயம் பூசப்பட்டதனால் அதன் ஆரம்பம் தடைப்பட்டது. ஆனால் இதனை ஆரம்பிப்பது கலாநிதி ஹிஸ்புல்லாஹ்வின் கனவாகவே இருந்தது. அதற்கான திட்டங்களை தீட்டி இப்பல்கலைக்கழத்தை இலங்கையில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலே ஒரு தரமான பல்கலைக்கழகமாக மாற்றுவதற்காக அவர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். எமது நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பட்டப்படிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் நாட்டில் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியை நாடு இழக்கின்றது. இந்த நிலையை மாற்றுவதற்கு அரசாங்கத்தினாலும் இதுவரை முடியாதுள்ளது. பல எதிர்ப்புக்கள் காரணமாக அரசுக்கு தனியார் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதில் தடைகள் இருக்கின்றன. இந்த நிலையிலேயே கிழக்கில் புனாணையில் இந்தப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. முதலாவதாக பல்கலைக்கழக அங்கீகாரத்துடன் பாடநெறிக்கு மாணவர்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள். அன்று போலிப் பிரச்சாரம் செய்து ஷரீஆப் பல்கலைக்கழகம் என கூறப்பட்ட இப்பல்கழைலக்கழகத்தின் முதலாவது அணியில் சிங்கள மாணவர்கள், தமிழ் மாணவர்கள், முஸ்லிம் மாணவர்கள் என 700க்கும் மேற்பட்டவர்கள் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஹிஸ்புல்லாஹ்வின் இந்த முயற்சி இன்று இந்த நாட்டுக்கு முன்மாதிரியாக அமைந்திருக்கின்றது. பல்கலைக்கழகத்தை சர்வதேச மட்டத்திலான ஒரு பல்கலைக்கழகமாக கட்டியெழுப்புவதற்கு பல்கலைக்கழக நிர்வாகமும், உயர் கல்வியமைச்சும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அன்று ஷரீஆப் பல்கலைக்கழகம், முஸ்லிம் பல்கலைக்கழகம் என்றெல்லாம் போலிப் பிரச்சாரம் செய்தவர்களுக்கு பதிலடியாக இன்று இந்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். அநேகமான விரிவுரையாளர்களாக பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். பல்கலைக்கழகம் தொடர்பில் பரப்பப்பட்ட வதந்திகள் எல்லாம் இன்று பொய்யாக்கப்பட்டு தரமான ஒரு பல்கலைக்கழகமாக இப்பல்கலைக்கழகம் நாட்டின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு இயங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

இந் நாட்டிலே கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களாக முஸ்லிம்களுக்கு எதிராகவும், தமிழர்களுக்கு எதிராகவும் போலிப் பிரச்சாரங்களை மேற்கொண்டு பல நல்ல முன்னெடுப்புகளை இனவாதிகள் முடக்கி வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் இப்பல்கலைக்கழகம் ஒரு பாடமாக அமையட்டும்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) "உதயம்"
இன்றிலிருந்து வாசகர்கள் மத்தியில் வலம்வரவுள்ளது.
இப் பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.
editor.uthayam@gmail.com

# கஹட்டோவிட்டவில் "சூபிஸம் ஓர் அறிமுகம்" நூல் வெளியீட்டு விழாவும் பாராட்டு விழாவும்








(ஐ. ஏ. காதிர் கான்)

பேராதனைப் பல்கலைக் கழக இஸ்லாமிய நாகரீகத் துறை முன்னாள் தலைவர், பன்னூலாசிரியர், அறிஞர், கலாநிதி அல்ஹாஜ் எம்.ஐ.எம். அமீன் எழுதிய "சூபிஸம் ஓர் அறிமுகம்" நூல் வெளியீட்டு விழா மற்றும் "சூபிஸம்" கருத்தரங்கும் பாராட்டு விழா என்பன, கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்கில் ஏற்பாட்டில், முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் அல்ஹாஜ் அஹமட் முனவ்வர் வழிகாட்டலில், மௌலவி அல்ஹாஜ் எம்.என்.எம். இஜ்லான் - காஸிமி (கலீபத்துல் பாதிபிய்யா - கஹட்டோவிட்ட) தலைமையில் (15) திங்கட்கிழமையன்று, முஸ்லிம் லேடீஸ் ஸ்டடி சேர்கில் கேட்போர் கூடத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இச்சிறப்பு விழா நிகழ்வில் நூலின் முதற்பிரதியை, அல்ஹாஜ் மாஹிர் ஹஸன் (மாளிகாவத்தை ஜ/ம்ஆப் பள்ளிவாசல் நிர்வாகி) பெற்றுக் கொண்டார். நூல் ஆய்வினை, கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (பொருளாளர் - அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா) மேற்கொண்டார்.

கஹட்டோவிட்ட அல் பத்ரிய்யா மகா வித்தியாலய முன்னோடி அதிபர் மர்ஹூம் எம்.ஏ. ஜப்பார் நினைவரங்கில் நிகழ்ந்த இச்சிறப்புப் பெரு விழாவில், முன்னாள் பிரதித் தேர்தல் ஆணையாளர் அஷ்ஷேஹ் எம்.எம். முஹம்மத், "கஹட்டோவிட்ட ஊர்" பற்றிய வரலாறை சிறப்புற அறிமுகம் செய்து வைத்தார்.

இச்சிறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம், "முஸ்லிம் சமூகத்தைக் கூறுபோட நினைப்பவர்களுக்கு இந்நூல் தகுந்த பாடம் கற்பிக்கும்" என, இந்நூலை மையப்படுத்தி சிறப்புரை நிகழ்த்தி, வந்திருந்தோரை சிந்தனையில் ஆழ்த்தினார். அத்துடன், "தலைவர் அஷ்ரஃப், கடைசி காலத்தில் சூபிஸப் பற்று கொண்டார்" என, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான கலாநிதி மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களை மேற்கோள் காட்டி, அவருக்கு புகழாரம் சூட்டினார். மேலும் இதன்போது, "1970 களின் பிற்பாடு நமது நாட்டிலுள்ள கந்தூரிகள் மூடு விழா கண்டன" என்றும், தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

இம்மாபெரும் சிறப்பு விழாவின்போது, நூலாசிரியர் எம். ஐ.எம். அமீன், ரவூப் ஹக்கீம் எம்பி யினால் பொன்னாடை போர்த்தி பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

முன்னாள் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் அல்ஹாஜ் அஹமட் முனவ்வர் உள்ளிட்ட பிரமுகர்கள் பலர் உரை நிகழ்த்திய இச்சிறப்பு நிகழ்வின்போது, வறிய மாணவர்களுக்கான இலவச கத்னா வைபவமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கச்சக்கொட்டித்தீவு – மாகமாறு வீதி காபட் இடும் பணி ஆரம்பம்!




(எஸ். சினீஸ் கான்)

கிண்ணியா கச்சக்கொட்டித்தீவு - மாகமாறு வீதி காபட் இடும் பணி திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்யினால் வியாழக்கிழமை (18) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இவ் வீதியில் பயணம் செய்யும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

# சேதமடைந்துள்ள நடுத்தீவு பிரதேச வடிகாண்: உரியவர்கள் கவனத்துக்கு!



அடைமழை காரணமாக மூதூர் பிரதேசத்தின் பெருமளவிலான பகுதிகள் பாதிப்படைந்த நிலையில் குறிப்பாக நடுத்தீவு பிரதேச வடிகாண்கன் நீர் நிரம்பிய நிலையில் காணமுடிகின்றது. 2016ம் ஆண்டு கொந்தராத்து வேலையில் ஈடுபட்ட டிப்பர் வாகனம் மோதுண்டதில் இவ்வடிகாண்களில் ஏற்படசேதத்தினால்நீர் வழிந்தோட இடம் இன்றியே இந்நிலை காணப்படுகின்றது.

சுமார் 7 வருடங்கள் கடந்தும் இவ்வடிகாண்கள் செப்பணிடப்படாமையினால் ஒவ்வொரு வருடமும் மழை பெய்யும் போது இப்பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.இதனால் டெங்கு பரவளுக்குரிய அச்சத்தையும் மக்கள் வெளிப்படுத்துகின்றனர்.இப்பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கம் சனசமூக அபிவிருத்தி சங்கம் மற்றும் சமூக அமைப்புகள் இதுபற்றி தெரியப்படுத்தியும் உரிய அதிகாரிகள் இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ள வில்லையென பிரதேச மக்கள் ஆதங்கத்தினை வெளிப்படுத்து கின்றனர். இதன் பிறகாவது உரிய அரசியல் தலைமைகள் பிரதேச அதிகாரிகள் இம்மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவார்களா?

(மூதூர் எஸ்.ஏ.பஹுஸ்)

# தென்கிழக்கு பல்கலைக்கழத்தில் சுத்திகரிப்பு பணி முன்னெடுப்பு



(பாறுக் ஷிஹான்)

அண்மையில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கின் காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் சில பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தது. இதில் பௌத்த, இந்து மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்களும் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தன.

மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 22.01.2024 வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தலைமையில் சுத்திகரிக்கும் நிகழ்வு (18) இடம்பெற்றது.

சுத்திகரிப்புப் பணியில் அக்கரைப்பற்று மாநகரசபையின் தீ அணைப்பு பிரிவும் இணைந்து கொண்டது. இன்றைய நிகழ்வில் பௌத்த, இந்து மற்றும் கிறிஸ்த்தவ தேவாலயங்கள் ஊழியர்களால் சுத்தம் செய்யப்பட்டன.

உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கருடன் நூலகர் எம்.எம். றிபாவுட்டீன் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், அரபு மற்றும் இஸ்லாமிய பீடத்தின் பீடாதிபதி எம்.எச்.ஏ. முனாஸ், வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ்.சபீனா எம்.ஜி.எச்., பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஏ.எம். எம். முஸ்தபா, வேலைப்பகுதி பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸில், மற்றும் பேராசிரியர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர் சங்க தலைவர் எம்.ரீ.எம். தாஜ/தீன், செயலாளர் எம்.எம். முஹம்மட் காமில் உள்ளிட்ட பலரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெற்றுவரும் அதேவேளை சேதங்கள் தொடர்பில் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்பட்டால் கையாளவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் கருத்து வெளியிட்டார். அத்துடன், சேதங்கள், மீள் கட்டுமானம் மற்றும் எதிர்கால அனர்த்த தவிர்ப்பு திட்டவரைபுகள் தொடர்பிலும் விரைவில் சம்மந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் சுத்திகரிப்பு பணிகளில் இன்றும் மிகுந்த சிரத்தையுடன் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக ஊழியர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

# வெலிகமவில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

வெலிகம புதிய தெரு முஹிய்யதீன் ஜு/ம்ஆ பள்ளிவாசல் நிருவாக சபையினர் மற்றும் புதிய தெரு இளைஞர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்த இலவச மருத்துவ முகாம் 2024.01.15ம் திகதி பள்ளிவாசல் வளாகத்தில் பள்ளிவாசல் நிருவாக சபையின் தலைவரும் தொழிலதிபருமான அல்ஹாஜ் எம்.எச்.எம். அருகம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

குறித்த இலவச மருத்துவ முகாமில் 15ற்கு மேற்பட்ட வைத்தியர்களுடன் உதவியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர். நோயாளிகளை பார்வையிடுவதற்கு முன்னர் அனைத்து வகையான பரிசோதனைகளும் இலவசமாக மேற் கொள்ளப்பட்டதுடன் குறித்த தினமும் பல பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு பின்னரே வைத்தியர்களிடம் நோயாளிகளை பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டு வைத்தியர்களின் ஆலோசனைக்கமைய இலலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டது.



இலவச மருத்துவ முகாமிற்காக வேண்டி விசேட அதிதிகளாக அல்ஹாஜ் அனஸ் அவர்களும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாத்தறை மாவட்டத்திற்கான உத்தியோகத்தர்களான வீ.ரீ. கனூரன் மற்றும் எம்.எம்.எப். முஈஸா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இலவச மருத்துவ முகாமிற்கென சுமார் 1400ற்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது இதற்காக உழைத்த வைத்தியர்களுக்கும், பள்ளிவாசல் நிருவாக உறுப்பினர்களுக்கும் இளைஞர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் ஊர்மக்கள் சார்பாக இவர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தாதிமார் பயிற்சி நெறிக்கு பயிலுனர்கள் விண்ணப்பம்

(எம்.எஸ்எம்.முன்தஸிர்)

அரச சுகாதார சேவையின் தாதிமார் பயிற்சி நெறிக்கு பயிலுனர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இந்த பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்புக்கு மூவாயிரத்து எண்ணூற்று அறுபத்திமூன்று விண்ணப்பதாரிகள் சுகாதார அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.இதில் அம்பாறை திருகோணமலை மற்றும் மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் நூறு சிறுபான்மை முஸ்லிம்களும் உள்ளடங்கியுள்ளனர்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான தெரிவில் அம்பாறை மாவட்டம்-54, திருகோணமலை மாவட்டம்-38, மட்டக்களப்பு மாவட்டம்-19, வவுனியா-01, மன்னார்-01 என்ற பேரளவில் சிறுபான்மை முஸ்லிம் பெயர்கள் உள்ளடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அம்பாறை மாவட்ட த்துக்கான நேர்முகப் பரீட்சை அம்பாறை தாதி பயிற்சி பாடசாலையில் இம்மாதம் 27, 28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இந்த மாணவர் தாதி பயிற்சி நெறிக்காக கடந்த செப்தம்பர் மாதம் பதினைந்தாம் திகதிய அரச வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரபபட்டது.இதற்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 13 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் பன்னிரண்டு நிலையங்களில் குறிப்பிட்ட தினங்களில் இடம்பெறுகின்றது.

மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பு சுகாதார அமைச்சில் இடம்பெறுகின்றது.ஏனைய மாவட்டங்களின் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சை குறிப்பிட்ட மாகாணங்களின் தலை நகரங்களில் அமைந்துள்ள தாதி பயிற்சி பாடசாலைகளில் குறிப்பிட்ட தினங்களில் இடம்பெறுகின்றது.

வட மாகாண விண்ணப்ப தாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் தாதி பயிற்சி பாடசாலையில் இடம்பெறவுள்ளது.மாவட்ட வாரியாக யாழ்ப்பாணம்-109, கிளிநொச்சி-29, வவுனியா-25, மன்னார்-15 , முல்லைத்தீவு-10 பேர் நேர்முகப் பரீட்சைக்கு தெரிவாகியுள்ளனர்.

குறிப்பிட்ட அரச வர்த்தமானி அறிவித்தலின் பிகாரம் நேய்முகப் பயீட்சை சபைமின் சிபாய்சின் அடிப்படையில் பயிற்சிக்காக தகுதியானவய்கள் தெரிவு செய்யப்பட வள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். நேய்முகப் பரீட்சைக்கு தோன்றும் அனைவரையும் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப் படுவதாக குறிப்பிட்ட அறிவித்தலின் எந்தப் பிரிவின் அடிப்படையிலும் அர்த்தப்படாது என அமைச்சின் செயலாளர் மேலும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இனிப்பும் கசப்பும்

வைஸ்

## தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும்

சில நாட்களாக எமது நாட்டின் பௌத்த பிக்குகளுக்கும் பௌத்த அமைப்புகளுக்கும் எம் நாட்டின் ஊடகங்களுக்கும் முக்கிய பேசு பொருள் மஹிந்த கொடிதுவக்கு எனும் பௌத்தர் பௌத்த மதத்தையும், புத்தரையும் அவமதித்தார் என்பதாகும். சில காலம் எகிப்தில் தங்கியிருந்த பின் தனது நாடான இலங்கைக்குத் திரும்பிய மஹிந்த தன்னை புத்தருக்கு சமமாக சித்தரித்துக் கொண்டு தனது போதனைகளை இவர் ஆரம்பித்தார்.

இவ்வாறு போதனை செய்ததை பெரிதாக எடுக்கா விட்டாலும் அதன் விளைவுகளே பிக்குகளையும் பௌத்த அமைப்புக்களையும் சிந்திக்க செயல்படத் தூண்டின. அவர்களின் எதிர்ப்பு வலுவடைந்ததும் அது ஊடகங்களுக்கு தீனியாகிவிட்டன. சில காலம் மறைத்து அமைதியாயிருந்த இனவாதிகளுக்கும் இது உந்துதலாகி விட்டது.

அந்த நபரின் போதனையால் மக்கள் கவரப்பட்டு விட்டனவு. வர வர அவவுகளது ஆதரவாளர்கள் பின்பற்றுவோர், வேகமாக அதிகரிக்கத் தொடங்கிவிட்டனர். விமான நிலையத்திலிருந்து இலங்கையில் அதி ஆடம்பரக் காரொன்றில் இவர் களனிய விகாரைக்கு வந்தார். இந்த விகாரை பௌத்தர்களின் முக்கிய விகாரையாகும். அந்த ஆடம்பரக் காரில் வந்த மஹிந்த கொடித்துவக்கு அங்க வந்து இறங்கியதும் அவரால் கவரப்பட்டு அவரை பின்பற்றுவோர் திரள ஆரம்பித்தனர். அவர்கள் விஷேட மத வைபவங்களில் பிக்குமாரை ஊர்வலமாக அழைத்துக் செல்லும் போது ஆலவட்டம் குடையின் கீழ் அழைத்து வரப்பட்டனர். அதி விஷேட ஊர்வலங்களில் பிக்குமாருக்கு பிடிக்கும் இக்குடை சாதாரண மனிதமான மஹிந்தவுக்கு பிடித்ததை கண்ட பிக்குமாரும் பௌத்த அமைப்புகளும் போருக்கு தயாராகி விட்டனர். இக்காட்சிளை தொலைகாட்சிகள் காண்பித்ததால் இன்னுமின்னும நிலை கொடூரமானது.

நேரங்காலத்தோடு கேள்விப்பட்டோ கேள்விப்படாமலோ அவரது கொள்கையை பின்பற்றுவோர் பெருந்திரளாக ஒன்று கூட ஆரம்பித்தனர்.

அது மட்டுமல்ல அவரை வணங்க ஆரம்பித்தனர். அவரது காலில் விழுந்து வணங்கிக் கொள்ள பெரும் போட்டி ஏற்பட்டது. பிக்குமாரை குனிந்து கும்பிடும் மக்கள் மஹிந்தவின் காலில் விழுந்து கும்பிட்டனர். காலைப்பிடித்துக் கும்பிட்டனர். நிலத்தில் படுத்தப்படி காலைப் பிடித்து கும்பிட்டனர். மார்க்க விடயங்களில் அநேகமாக வயது முதிர்ந்தோரே இவ்வாறான செயல்களை செய்தனர். ஆனால் இங்கு வயோதிபர் மட்டுமல்ல இளைஞர்களும், சிறு வயதினரும் இவ்வாறு விழுந்து காலைப் பிடித்து கும்பிட்டதை காண முடிந்தது. தான் புத்தரின் மறு பிறவி அல்லது அவருக்கு சமமானவர் என்ற அமைப்பிலேயே அவரது போதனைகள் தொடர்ந்தன.

இறுதியிலே மஹா நாயக்கர்கள் நான்கு பேரும் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதி ,வரை கைது செய்யும்படி கூறினர். அதன் பின் சீ.ஐ.டீ யினர் அவரை கைது செய்தனர். நீதிமன்றத்தில் நிறுத்தினர். சட்டமா அதிபரின் திணைக்களத்தில் சட்டமா அதிபருக்கு அடுத்ததாக உள்ள ஜனரால் திலீப் பீரிஸ் இந்த சொலிசிட்டர் நீதவான் நீதிமன்றத்தில் தோன்றி பிணை வழங்குவதை எதிர்த்தார். இவ்வாறான ஒரு உயர் பதவியிலுள்ளவர் கடைசி மட்டத்தில் உள்ள நீதவான் நீதிமன்றத்தில் தோன்றி வாதிட்ட மஹிந்தவை விளக்கமறியலுக்கு அனுப்பும் நிலை வந்த விட்டது.

நாங்கள் இதிலிருந்து விளங்க வேண்டியது என்னவென்றால் ஒரு மதத்தை அவமதிப்பதென்பது பாரதூரமான விடயம் என்பதாகும். சாதாரணமாக ,து போன்ற கீழ் நிலை நீதிமன்றங்களில் பொலிசாரே வழக்குகளை நடத்துவதுண்டு. ஆனால் இங்கு, சட்டமா அதிபருக்கு அடுத்த நிலையில் உள்ள சட்ட அறிஞர் தோன்றி நின்று மஹிந்தவுக்கு எதிராக வாதாடியள்ளனர்.

குற்றவாளிக் கூண்டில் மஹிந்தவின் நடவடிக்கைகளை அவதானித்த நீதவான் அவரை மனநோய் பரிசோதனைக்கு அங்கொடை வைத்தியசாலைக்கு அனுப்பும்படி பணித்துள்ளார். வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மதங்களை அவமதிப்பது என்பது இலங்கைக்கு புதிய விடயமல்ல. ஆனால் ,வ்வாறு சீ.ஐ.டீ. யினர் கைத ெய்து நீதமன்றத்தில் நிறுத்துவது சாதாரண விடயமல்ல. அரசாங்கம் அக்கரையெடுத்து நீதிமன்றம் கொண்டு செல்ல உத்தரவிடுவதும் புது விடயமே.

கடந்த பத்து வருடங்களுக்குள் மதங்கள் நிறைய அவமதிக்கப்பட்டுள்ளன. அநிதிகள் இழைக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை இஸ்லாமிய, இந்து, கிறிஸ்தவ மதங்களுக்கு எதிராகவாகும். சில பௌத்த குருமார் இஸ்லாத்தை அவமதித்துள்ளனர். இஸ்லாத்துக்கு எதிராக பௌத்த மக்களை தூண்டும் வகையில் செயல்பட்டிருக்கின்றர். எமது நாட்டின் ஊடகங்களும் ஒரே விடயத்தை தொடர்ந்து பல நாட்கள் ஒளிபரப்பியும் வெளியிட்டும் பௌத்த மக்களை தூண்டி விட்டுள்ளனர்.

சாபி போன்ற நல்ல வைத்தியர்களுக்கு அவதூறு ஏற்படுத்தி அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் பிரச்சினை ஏற்படுத்தியது மாத்திரமன்றி அதனை வைத்து முஸ்லீம்களுக்கு எதிராக மக்களை தூண்டினர்.

இது மட்டுமல்ல ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின் முஸ்லிம்கள் வெளியில் தலைகாட்ட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர். முஸ்லிம்கள் என்றால் எதிரிகள் என்ற நிலையை சில பின்குமாரும், சில இனவாத இயக்கங்களும் ஏற்படுத்தினா. அரசியலைமைப்பில் உள்ள மத சுதந்திரத்தை விட பேண முடியாத நிலை வந்தது.

குர்ஆனையும், அல்லாஹ்வையும் ஒரு பிரபல பிக்கு அவமதித்தார். ஆனால் அரசாங்கம் அவர்களை ஒன்றும் செய்யவில்லை. தனிப்பட்ட சிலரே முறைபாடு செய்தனர். ஆனால், இன்னும் தொடர் கதைதான். முடியாத வழக்காக உள்ளது.

மஹிந்த வழக்கை போன்று சட்டமா அதிபர் சார்பில் எவரும் இவர்களுக்கு எதிராக வழக்காடவில்லை.

கடந்த காலங்களில் முஸ்லிம்கள் எவ்வளவோ இன்னல்களை அனுபவித்தனர். யாருமே கவனிகக்வில்லை. அரசியலமைப்பின் சம உரிமை எங்கு சென்றதோ தெரியவில்லை. முஸ்லிம்களுக்கு எதிராக போலி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. பின் அவை போலி என ஊர்ஜிதமாகியது.

மதங்களை அவமதிப்பதை கடும் குற்றமாக்க வேண்டும். சிறை கட்டாயமாக்கப்பட வேண்டும். ஆனால் ஒரு மதத்துக்கு மட்டுமல்ல எல்லா மதத்தினருக்குமாக இருக்க வேண்டும். இதற்கு மத நிந்தனை தொடர்பான சட்டங்கள் வர வேண்டும் எல்லா மதத்துக்குமாக வர வேண்டும். வழக்காளியாக அரசாங்கம் மாற வேண்டும்.

# நாட்டின் நிலவரத்தினை சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுக்கு எடுத்துக் காட்டிய எதிர்க்கட்சித் தலைவர்

நாட்டின் பொருளாதாரத்தின் அண்மைய போக்குகளை ஆய்வு செய்வதை முக்கிய நோக்கமாக கொண்டு நாட்டிற்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் (IMF) குழு மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் இடையிலான சந்திப்பொன்று நேற்று (18) மாலை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

சர்வதேச நாணய நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி,Mr Peter Breuer (Senior Mission Chief),Ms Sarwat Jahan (Resident Representative), Manavee Abeyawickrama (Local Economist) ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனை எனக் கூறி மக்களுக்கு பெரும் வரிச்சுமைய சுமத்தி, ஏயுவு உட்பட பல்வேறு வகையான வரிகளை கூடியளவில் பிறப்பித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.



பொது மக்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள்,நடுத்தர வர்க்கத்தினர், அரச ஊழியர்கள் என பல துறைகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆதாரங்களுடனும், உண்மை சாட்சி மற்றும் தரவுகளுடனும் இங்கு சுட்டிக்காட்டினார்.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தின் கீழ்,தற்போதைய அரசாங்கம் ஐஆகு உடன் ஒருதலைப்பட்சமாக எட்டிய உடன்பாட்டை திருத்தியமைத்து பொது மக்களுக்கு முக்கியமான,மக்கள் சார் உடன்பாட்டை எட்ட எதிர்பார்கின்றோம். இதற்கான முறையான வேலைத்திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு சுட்டிக்காட்டினார்.

அத்துடன்,தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளினால் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களை ஆதரவற்ற நிலையில் இருந்து விடுவிக்கவும்,தற்போதுள்ள வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டு,துயரிலும், ஆதரவற்ற நிலையிலிருந்தும் மக்களை காப்பாற்ற, ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் இருந்து செயற்படுவது போலவே அரச அதிகாரம் கிடைத்தவுடன் செயற்படுவதற்கான முறையான திட்டம் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இச் சந்திப்பில்,ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி,பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, கபீர் ஹாசிம், சுஜீவ சேனசிங்க, கலாநிதி நாலக கொடஹேவா மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜேகுணவர்தன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வட்வரி அதிகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



(தோப்பூர் – எஸ்.ஏ.எம்.அஸ்மி)

வட்வரி அதிகரிப்புத் திட்டத்திற்கும், மரக்கறி உள்ளிட்ட அத்தியவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கும் எதிர்ப்புத் தெரிவித்து மூதூர் பிரதான வீதியின் முன்பாக வியாழன்று (18) காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் மூதூர் கிளை இதனை ஏற்பாடு செய்திருந்தது.இதன்போது நாட்டில் தற்போது மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்புச் செய்யப்பட்டதை வழியுறுத்தும் வகையில் மரக்கறிகள் விழிப்புணர்வுக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அத்தோடு வரி அதிகரிப்பைக் கொண்டு வந்த , ரணில் அரசாங்கத்திற்கு எதிராக சுலோகங்கள் ஏந்தப்பட்டு கோசங்கள் எழுப்பப்பட்டு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திரா, மூதூர் அமைப்பாளர் சப்றான், தோப்பூர் பிரதேச அமைப்பாளர் பஜீர் ,மூதூர் பிரதேச தேசிய மக்கள் சக்தியின் முன்கள பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சூழலை சுத்தமாகபேண அக்கறையுடன் செயற்படும் வெளிநாட்டவர்கள்





(எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

மனிதன் தன்னையும் தனது குடும்பத்தினரையும் நேசிப்பது போன்று தனது சூழலையும் நேசிக்க வேண்டும்.சூழலை நாம் நேசித்தால் சூழல் நம்மை நேசிக்கும்.உலகில் பிறந்த அனைவருக்கும் மனிதம் இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

உலகில் ஒவ்வொரு வருடமும் சூழல் ஒன்று இருக்கின்றது, அதனை நாம் சுத்தமாகவும்,சுகாதாரமாகவும் வைத்திருக்க வேண்டும் என்று ஞாபகப்படுத்தும் வகையில் உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

அதனையும் ஓரிரு தினங்களில் மனிதன் மறந்து விடுகின்றான்.

நீர்,நிலம், வளி என்ற வகையில் மனிதனின் ஆய்ந்தோய்ந்து பாராத செயற்பாட்டினால் பல வழிகளில் நம்மை அறியாமலேயே சூழல் மாசடைகின்றது.

சூழலில் குப்பைகள் சேர்ந்தால் பிரதேசத்திலுள்ள ஆர்வலர்கள் சிலர் சிரமதானம் என்ற போர்வையில் சுத்தம் செய்து கூடிக்கலைவது மரபாகி விட்டது.அப்படியான செயற்பாட்டின் பின்னர் சூழல் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என்பதை மறந்து விடுகின்றனர்.

நமது நாட்டிலுள்ள மக்களை விட வெளிநாட்டவர்களிடம் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பதில் சிறு வயது தொடக்கம் மனதில் ஊட்டப்படுகின்றது. அதனால் அம் மக்கள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் நோய் நொடியின்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வே பல்கலைக்கழக மாணவர்கள் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் அதிகம் சஞ்சரிக்கும் கண்டி புகையிரத நிலையத்தை சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட்டமை எம் அனைவரையமே வெட்கித் தலை குனிய வைத்துள்ளது.

இச் செயற்பாடு எமது நாட்டு மக்களுக்கு அவர்கள் ஏற்படுத்தியுள்ள பெரும் படிப்பினையாகும்.

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவருடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சந்திப்பு



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் சாஹிப் அவர்களை திருச்சியில் உள்ள அவரது இல்லத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அவர்கள் நல்லெண்ண முறையில் நேரில் சந்தித்தார்கள். அப்போது தமிழ்நாடு வக்ஃப் வாரிய தலைவரும், மாநில முதன்மை துணைத் தலைவருமான எம்.அப்துல் ரஹ்மான் அவர்களும் உடன் இருந்தார்கள்.

இந்த நல்லிணக்க சந்திப்பில் இந்தியா-இலங்கை உடனான நட்புறவு குறித்தும்,உலகளாவிய அரசியல் குறித்தும், சிறுபான்மை மக்களுக்கான செயல் திட்டங்கள் குறித்தும் மற்றும் இலங்கையின் தற்போது நிலவி வரும் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு நிலவரங்களையும், தற்போது இலங்கை அரசாங்கம் செய்து வரும் பல்வேறு பணிகள் குறித்தும் கலந்துரையாடினார்கள்.

இச்சந்திப்பின் போது திருச்சி தெற்கு மாவட்ட தலைவர் கே. எம். கே. ஹபீபுர் ரஹ்மான்,மாணவர் அணி மாநில அமைப்பாளர் ஏ. எம். எச். அன்சர் அலி, மாவட்ட துணைத் தலைவர் ஏ. கே. .அலாவுதீன், இளைஞர் அணி மாவட்ட செயலாளர் பேரா. மைதீன் அப்துல் காதர், மகளிர் அணி மாவட்ட தலைவர் ஆரிஃபா,காஜா நகர் பிரைமரி தலைவர் கே. எம். கே. பைசூர் ரஹ்மான், மணிச்சுடர் ஊடகவியலாளர் திருச்சி எம். கே .ஷாகுல் ஹமீது மற்றும் ஸ்ரீலங்கா பவன்பீடி குழும உரிமையாளர் மகன் சிவா வடிவேல் ஆகியோர் உடன் இருந்தனர்.

# மல்வத்தை பிரதேச வைத்தியசாலைக்கு கண்காணிப்பு கள விஜயம்




(எம்.எம். ஜெஸ்மின்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் மல்வத்தை பிரதேச வைத்தியசாலையில் சுமார் 1.5 மில்லியன் ரூபாவில் நிர்மாணிக்கப்படும் விடுதி கட்டிடத்தை பார்வையிட்டதுடன் தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஒப்பந்தக்காரரையும் கலந்தாலோசனையும் செய்தனர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன் அவர்களும் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம். சீ.எம் மாஹிர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களும் குறித்த கள விஜயத்தில் இணைந்து கொண்டதுடன் வேலைத்திட்டத்தை விரைவாக முடிவுறுத்தி அதனை பாவனைக்காக கையளிப்பது தொடர்பிலும் கலந்தாலோசித்தனர்

குறித்த நிகழ்வில், வைத்தியசாலையின் நீண்டநாள் தேவையாக இருந்த குளிரூட்டி வழங்கி வைக்கப்பட்டதுடன் ஞாபகார்த்தமாக மரமொன்றையும் பணிப்பாளர் நட்டு வைத்தார்

மல்வத்தை பிரதேச வைத்திய அதிகாரி அவர்களின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்திய சாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



வதுபிடிவல ஆதார வைத்திய சாலையின் கர்ப்பிணி தாய்மார்களின் பிரிவுக்கு அவசியமான நீர் கொதிகளன் (Water Geyser) பிரபல சமூக சேவையாளர் சிராஸ் யூனுஸினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இது தொடர்பாக வைத்திய சாலையில் இடம்பெற்ற நிகழ்வில் அன்பளிப்புக்கான ஏற்பாட்டாளர் எம்.பிர்தௌஸ்ஹாஜி,வைத்திய சாலை மேற்றன் மற்றும் கர்ப்பிணி தாய்மார் சிகிச்சைப் பிரிவின் தாதியர்களும் கலந்துகொண்டனர்.

(எம்.எஸ்.எம்.முன்தஸிர்)

# இந்தியாவில் திறக்கப்படும் இராமர் கோயில்

## பின்னணியில் புதைந்து கிடக்கும் இந்துத்துவ அரசியல்....!



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

அயோத்தியில் ராமர் கோவில் திறப்பு விழா என்கிற பெயரில் மிகப் பெரிய அரசியல் திருவிழா இந்தியாவில் ஆரம்பம் ஆகி விட்டது. அதாவது முஸ்லிம்கள் பல நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக வணங்கி வந்த பள்ளி வாசலை முழுமையாக  தகர்த்து விட்டு நீதிமன்றம் வாயிலாக தங்களுக்கு சாதகமான தீர்ப்பு பெற்ற பிறகு தான் ராமருக்கு கோயில் கட்டப்பட்டு வரும் ஜனவரி 22 ந் தேதி திறப்பு விழா நடைபெறுவதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது.

இந்த விழாவை தான் ஆளும் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசு சர்வதேச விழா போன்று விளம்பரங்கள் செய்து அரசியல் லாபம் சம்பாதித்து வருவதாக இந்தியாவில் உள்ள பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சி உட்பட அனைத்து கட்சிகளும் மிக கடுமையாக குற்றம் சாட்டி வருகிறது.இதன் மூலம் இந்தியாவில் மதச் சார்பின்மை என்பது கேள்விக்குறியாகி இருக்கிறது என்பதே யதார்த்தம் நிறைந்த உண்மையாகும்.

இந்தியாவில் ராமன் என்கிற கடவுளின் பெயரால் கடந்த 35 ஆண்டுகளாக மிகப் பெரிய அளவில் அரசியல் விளையாட்டு நடந்து வருகிறது. 1987 ம் ஆண்டு முதன் முதலில் இந்தியாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சி ராஜிவ் காந்தி தலைமையில் நடைபெற்ற போது தான் இராமர் சிவையை பாபர் மசூதியில் வைத்து வழிபாடு செய்ய அனுமதி வழங்கப்பட்டது. அதன் பின்னர் 1989 ம் ஆண்டு வி பி சிங் தலைமையில் ஆட்சி நடந்த போது விடயத்தை திசை திருப்பி இந்து மக்களின் உணர்வுகளை தூண்டும் வகையில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சி கவிழ்ப்பை அரங்கேற்றம் செய்து முதன் முதலில் பதட்டத்தை ஏற்படுத்தியது.

1949 ஆம் ஆண்டில் மசூதிக்குள் சிலை முதன்முதலில் நிறுவப்பட்ட போதே, அதன் இடிப்புக்கு அடித்தளம் அமைக்கப்பட்டுவிட்டதாக மேலும் சிலர் கூறுகின்றனர். .1949 டிசம்பர் 22-23 இரவு, அபய் ராம்தாஸும் அவரது தோழர்களும் சுவர் ஏறி குதித்து, ராம்-ஜானகி மற்றும் லக்ஷ்மன் சிலைகளை மசூதிக்குள் வைத்து, ராமர் அங்கே தோன்றி தனது சொந்த இடத்திற்கு திரும்பிவிட்டதாக பிரசாரம் செய்தனர். நீதிமன்றத்தில் இதுவரையில் இருந்த இந்த விவகாரம், சிலை நிறுவப்பட்டதன் காரணமாக, சர்ச்சைக்குரிய விஷயமாக மாறியது. சாதுக்களால் அன்று எடுக்கப்பட்ட கோயில் கட்டுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றும் நடவடிக்கை படிப்படியாக முன்னேறியது.

வழக்கம் போல் அடுத்த வெள்ளிக்கிழமை, முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் காலை பஜர் தொழுகைக்காக பாபர்  பள்ளி வாசலுக்கு வந்தனர். ஆனால் நிர்வாகம் சில நாட்கள் ஒத்திவைப்பு கேட்டுக் கொண்டு அவர்களை திருப்பி அனுப்பியது. இங்கு தான் தேச விரோத மத பதட்டம் முதன் முதலில் ஆரம்பம் ஆனதாக தெரிகிறது.

அதன் பின்னர் தான் இந்தியா முழுவதும் பாபர் மசூதி பிரச்சினை பெரிதான நிலையில் 1992 ம் ஆண்டு இந்த பள்ளிவாசல் கட்டம் முழுமையாக தகர்க்கப்பட்டது.1992ஆம் ஆண்டு, டிசம்பர் 6 ஆம் தேதி. விஸ்வ இந்து பரிஷத்தின் (வி.எச்.பி) ஆர்வலர்கள் மற்றும் பாரதிய ஜனதா கட்சி மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புகளின் சில தலைவர்கள் சர்ச்சைக்குரிய இடத்தில் ஒரு பேரணிக்கு ஏற்பாடு செய்தனர். இதில் ஒன்றரை லட்சம் தொண்டர்கள் (கர சேவகர்கள்) கலந்து கொண்டனர்.பேரணி பின்னர் வன்முறையாக மாறியது மற்றும் கும்பல் அந்த பகுதியின் பாதுகாப்பை தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து,16ஆம் நூற்றாண்டின் பாபர் மசூதியை இடித்தது. அப்போதைய குடியரசு தலைவர் சங்கர் தயாள் சர்மா, உத்தர பிரதேசத்தில் குடியரசு தலைவர் ஆட்சியை அமல்படுத்தி, சட்டசபையை கலைத்தார். இந்த இடிப்பு ஒட்டு மொத்த இந்திய தேசத்தின் இறையாண்மை, மத சார்பற்ற தன்மை, மத நல்லிணக்கம், சமூகங்கள் இடையேயான ஒற்றுமை, தேசத்தின் வளர்ச்சி,  சகோதரத்துவம் என்கிற எல்லா நன்மைகளும் இடித்து தூள், தூளாக்கப்பட்டு விட்டது என்பது தான் யதார்த்தமான உண்மையாகும். 1992 ம் ஆண்டு இந்திய வரலாற்றில் இது ஒரு கறுப்பு பக்கம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இந்த கொடுமை நடந்த போது இந்தியாவில் மத்திய அரசில் ஆட்சியில் இருந்தது காங்கிரஸ் கட்சி என்பது தான் கசப்பான உண்மையாகும். அதன் பிரதமர் நரசிம்ம ராவ் திட்டமிட்டுதான் இந்த  கொடுமை நடந்த நேரத்தில் தடுக்க தவறி அமைதி காத்தார் என்பதை இன்று வரை சர்வதேச பத்திரிகைகள் சுட்டி காட்ட தவறவில்லை என்பது கூடுதலான செய்தியாக உள்ளது. மதச்சார்பற்ற கட்சியான காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் இந்த கொடுமை நடக்காமல் தடுத்து இருந்தால் இன்று இந்துத்துவ சக்திகள் வலுப்பெற்று இருக்க வாய்ப்பே இல்லை என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது என்பது கூடுதல் தகவலாக பதிவு செய்து கொள்ள வேண்டியுள்ளது.

இந்தியாவில் தற்போது 2024 ஜனவரி  22 ம் தேதி ராமர் கோயில் திறப்பு விழா மூலம் பரபரப்பை ஏறபடுத்தி பிரதமர் மோடி தான் இந்துக்களின் காவலர் என்பது போன்ற மாய பிம்பத்தை கட்டமைத்து வாக்கு அரசியல்  மூலம் மிகப் பெரிய அளவில் அறுவடை செய்ய பாஜக மற்றும் ஆர் எஸ் எஸ் அமைப்புகள் தெளிவான திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தி வருவது தெளிவாக தெரிகிறது. இந்த நிலையில் இந்திய மாநிலங்கள் முழுமையாக அயோத்தி.... அயோத்தி என்கிற ராம கோஷம் விண்ணை பிளக்க வேண்டும் என்று மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசு திட்டமிட்டுள்ளது. அன்றைய நாளில் அரசு நிர்வாகம் சார்ந்த அலுவலகங்கள் முழுமையாக விடுமுறை விடப்பட்டுள்ளது. நாடு முழுவதும் ராம ஷேத்திரம் சென்று வர வசதியாக ரயில் மற்றும் சாலை போக்குவரத்துக்கள் விரிவான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தொலைக்காட்சிகள் முழுமையாக மோடியின் தலைமையிலான பா ஜ க வின் கட்டுப்பாட்டில் வந்து விட்ட நிலையில் எங்கு பார்த்தாலும் ராம கோஷம் மற்றும் விவாதங்கள் தான் இந்தியா முழுவதும் காட்சிப்படுத்தப்படும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்துக்களின் நாயகனாக மோடி நாடு முழுவதும் கொண்டு சேர்க்கப்படும் நிலை காணப்படுகிறது.

வரும் 2025ஆம் ஆண்டுக்குள் இந்து ராஷ்டிரா அமைக்கப்படும் என்று கோவாவில் நடைபெற்ற அகில இந்திய இந்து ராஷ்டிர மாநாட்டின் ஏற்பாட்டாளரான இந்து ஜன் ஜாக்ருதி சமிதி கூறியுள்ளது.இந்து ராஷ்டிரத்தை உருவாக்குவதற்கான சட்ட, சமூக நுணுக்கங்கள் ஒருபுறம் இருந்தாலும், இந்தக் கோரிக்கையை முன்னெடுப்பதில் இந்துத்துவ அமைப்புகளும் தலைவர்களும் முக்கியப் பங்காற்றியுள்ளனர். இந்த அமைப்புகளின் எண்ணிக்கை கடந்த பல ஆண்டுகளாக அதிகரித்து வருகின்றன. ஆயினும் இதன் எண்ணிக்கை பற்றிய தரவு கிடைக்கவில்லை.இந்தக் குழுக்கள் தங்களது வழக்கமான செயல்பாடுகள், சர்ச்சைக்குரிய மற்றும் வகுப்புவாதப் பேச்சுகள் மூலம் இந்துக்களிடையே தங்களைப் பொருத்தமாக வைத்திருக்க முயல்கின்றன. முடிந்தவரை பலரைச் சென்றடைய சமூக ஊடக சேனல்களை எப்படிப் பயன்படுத்துவது, பிரைம் டைமில் மீடியாவை எப்படி தங்கள் பிடியில் வைப்பது என்பதும் அவற்றுக்குத் தெரியும்.

கடந்த சில ஆண்டுகளில் எத்தனை புதிய இந்துத்துவ அமைப்புகள், குழுக்கள் பிறந்துள்ளன என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் பல பிரிவுகள் குறுகிய காலத்திற்கு மட்டுமே செயல்படுகின்றன. அவை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, சர்ச்சைக்காக உருவாக்கப்படுகின்றன. நோக்கம் நிறைவேறிய பிறகு அவை மறைந்துவிடும் என்பதே உண்மையாகும்.”கடந்த சில வருடங்களில் வெளிவரும் புதிய பெயர்கள் ஏதோவொரு நோக்கத்திற்காக அமைக்கப்படுபவை. இதன் தொண்டர்கள் ஏதோ ஒன்றால் ஈர்க்கப்படுகிறார்கள். ஆனால் இதன் தலைவர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் நிறுவப்பட்ட ஏதோவொரு இந்துத்துவ அமைப்போடு நீண்டகாலத் தொடர்பு கொண்டவர்கள் எனத் தெரிய வருகிறது,” என்று அவர் மேலும் கூறினார். கடந்த மூன்று-நான்கு ஆண்டுகளில் மேற்கு உத்தர பிரதேசத்தில் சுமார் 60 சிறு குழுக்கள் உருவாகியுள்ளன என்று கூறுகிறார். ”இவற்றில் பலவற்றை யாருக்கும் தெரியாது, இவை பதிவு செய்யப்படுவதில்லை. கட்டுப்பாடுகள் எதுவுமில்லாத இவர்கள் தங்கள் சொந்த விதிமுறைகளின் கீழ் அவற்றை இயக்குகிறார்கள்,” என்று அவர் குறிப்பிட்டார். ஆனால், இந்த இந்து குழுக்கள் பல்வேறு வகையிலும் ஆர் எஸ் எஸ் அமைப்பு உடனான தொடர்புகளை வலுப்படுத்தி கொண்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக இஸ்லாமிய சமூகத்திற்கு எதிராக இவர்களின் வெறுப்பு பேச்சை ஆர் எஸ் எஸ் அமைப்பு இதற்கும் எங்களுக்கும் எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லை என்று சாதுர்யமாக மறுத்து விடுகிறார்கள்.இது போன்று தான் பல்வேறு வடிவங்களில் ஆர் எஸ் எஸ்  அமைப்பு, அவர்களின் திட்டத்தை மறைமுகமாக நிறைவேற்றி வருகிறது.

கடந்த ஏழு-எட்டு ஆண்டுகளில் இது இந்து தீவிரவாத குழுக்கள் இந்திய மாநிலங்கள் பலவற்றில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றன என்று கூறுவது நியாயமாக இருக்கும். காரணம், நிர்வாகத்தின் ஆதரவை அவர்கள் பெறுகிறார்கள். பாஜக ஆட்சியில் உள்ள மாநிலங்களில் அவர்கள் அதிக சுறுசுறுப்பாக உள்ளனர். பாஜகவின் அரசியல் அடிப்படை “ஒருமுனைப்படுத்தல்“. பாஜக, அரசியல் சாசனத்திற்குக் கட்டுப்பட்ட ஓர் அரசியல் கட்சி. எனவே ஒருமுனைப்படுத்தல் போன்ற வேலையை அக்கட்சியால் நேரடியாகச் செய்ய முடிவதில்லை. அந்த வேலைகளை இந்த அமைப்புகள் செய்கின்றன,” என்பதை நாங்கள் தெளிவாகவே உணர்ந்து கொள்ளக்கூடிய கள சூழல் தற்போது இந்தியாவில் காணப்படுகிறது.

நாட்டில் வேலை வாய்ப்புகள் குறைந்துள்ளன. அரசியல் எதிரிகள் உருவாகியுள்ளனர். சமூகத்தின் அடிமட்ட நிலையில் நிற்கும் மக்களிடையே இந்துவாக இருப்பதை அடையாளம் காட்டுவது அதிகரித்துள்ளது. ஆங்கிலத்தை மேன்மையாக மதிக்கும் இந்தியாவின் மேல்தட்டு வர்க்கத்தின் மீது பிறமொழி பேசும் மக்களின் கோபம் உள்ளது. பட்டம் பெற்ற பிறகும் இளைஞர்கள் வேலை இல்லாமல் அலைகின்றனர். அடையாள அரசியலின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. அரசு அமைப்புகள் தங்களுக்கு மனப் பாதுகாப்பைத் தருவதில்லை என்று பொதுமக்கள் நினைக்கிறார்கள் என்று சதேந்தர் குமார் குறிப்பிட்டார்.

”வேலை இல்லாததால் யாரும் உங்களை மதிப்பதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் அமைப்பின் அட்டை வைத்திருக்கும்போது, உங்களை யாராலும் எதுவும் செய்ய முடியாது என்று உணர்கிறீர்கள்,” என்கிறார்.

”சமூகத்தில் வேலையில்லா திண்டாட்டம் அதிகமாக இருக்கும் நிலையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் திசையில் அரசு சமூகத்தில் வேலையில்லா திண்டாட்டம் அதிகமாக இருக்கும் நிலையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கும் திசையில் அரசு எதுவும் செய்யவில்லை. மாறாக வேலை வாய்ப்புகள்அழிக்கப்படுகின்றன. இதன் காரணமாக இளைஞர்கள் மிக எளிதாக அந்த வலையில் விழுகின்றனர். இப்படி பட்ட இந்து இளைஞர்கள் பெரும்பாலும் மூளைச்சலவை செய்யபட்டு கலவரங்களில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிலையில் அயோத்தியில்  ராமர் கோவில் திறப்பு விழா நடைபெறும் ஜனவரி 22-ந் தேதியன்று அனைத்து மத்திய அரசு அலுவலகங்களுக்கும் அரைநாள் விடுமுறை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அயோத்தி ராமர் கோவில் திறப்பு விழாவை முன்னிட்டு பல்வேறு மாநிலங்கள் அரசு விடுமுறை நாளாக அறிவித்துள்ள நிலையில் மத்திய அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.மத்திய அரசு, ஜனவரி 22-ந் தேதி அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் அரைநாள் விடுமுறை அறிவித்துள்ளது. அன்றைய தினம் மத்திய அரசின் அனைத்து துறைசார் நிறுவன அலுவலகங்கள், தொழில் மற்றும் கல்வி நிறுவனங்கள் அனைத்துக்கும் நாடு முழுவதும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் வரும் 2024 ம் ஆண்டு இந்தியாவில் நடைபெறும் பொது தேர்தல் நடைபெறும்  சூழலில், நாங்கள் பாஜகவின் அரசியலுக்கு எதிராக நிற்கிறோம், இந்துக்களுக்கு எதிராக அல்ல என்று காட்டுவதற்கான நிர்பந்தம் காங்கிரஸ் கட்சி உட்பட அனைத்து எதிர்க் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் எதிர் கட்சிகள் அமைந்துள்ள இந்தியா கூட்டணியில் இருக்கும் அனைத்து கட்சிகளுக்கும் ராமர் கோவில் அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ள நிலையில் இந்த சூழல் பல்வேறு கட்சிகளுக்கும் தர்ம சங்கடத்தையே ஏற்படுத்திருக்கிறது. ஏனெனில், பாரதிய ஜனதா கட்சி இதில் முழுமையாக அரசியல் செய்து வரும் நிலையில் இதனைத் புறக்கணிப்பு செய்வதே வழியாக இருந்த போதிலும் நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது மோடியின் கட்சியினர் காங்கிரஸ் கட்சி உட்பட 27 கட்சியின் கூட்டணியை இந்து விரோதிகள் என்று பரப்புரை செய்யும் பட்சத்தில் பெரும்பாலான வட இந்திய இந்து வாக்காளர்கள் இடம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அவர்கள் அஞ்சிய நிலையில் இது மோடிக்கு தேர்தலில் சாதகமான சூழ்நிலையை ஒரு வேளை ஏற்படுத்தலாம் என்கிற அரசியல் விமர்சகர்களின் பார்வையை நாம் முழுமையாக நிராகரித்து விட முடியாது என்பதே உண்மையாகும்.

உண்மையில்  இந்தியா போன்ற ஒரு தேசத்தின் நலன் மற்றும் வளர்ச்சி என்பது மதசார்பற்ற நிலையில் தான் அமைய வேண்டும் என்பதை கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி மற்றும் கட்டமைப்புகள் தெளிவாக எடுத்து காட்டியது. அதேநேரத்தில் இந்தியா சர்வதேச நாடுகளுக்கு இணையாக இராணுவ பலத்தையும், விண்வெளி ஆய்வுகள் மற்றும் பொருளாதார வல்லமையை தன்னகத்தே கொண்டுள்ள தேசமாக மாறியது. அப்போதெல்லாம் இந்தியா மதச்சார்பற்ற தேசமாகவே இந்த முன்னேற்றத்தை அடைந்தது. ஆனால் இந்தியாவின் ஹிந்து கடும் போக்குவாதிகள் வேறு ஒரு தேசத்தை கட்டமைக்கக ஏற்ப புதிய வடிவத்தை உருவாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது இந்தியாவிற்கு ஆபத்தான அறிகுறியாகவே பொது ஊடக ஆர்வலர்கள் மூலம் பார்க்கப்படுகிறது. இந்து மதம் என்பது சனாதன தர்மத்தை மட்டுமே ஏற்றுக் கொண்டுள்ள ஒற்றை சார்பு மதம் அல்ல. இந்து மதத்தில் ஆடு, கோழிகள், பன்றி மட்டும் எருமைகளை கூட தங்கள் இஷ்ட தேவதைகளுக்கு பலியிடும் வழக்கம் இந்தியாவில் காணப்படுகிறது.ஆனால் , இந்தியாவை வேதங்கள் மற்றும் சமஸ்கிருதம் மூலம் புதிய இந்தியாவை உருவாக்க பிராமணர் நலன் சார்ந்த ஆர் எஸ் எஸ் அமைப்பு தீவிரமாக பாடுபட்டு வருகிறது. இந்த ஆர் எஸ் எஸ் அமைப்பு தேசப்பற்று மற்றும் தேசியவாதம் ஆகியவற்றை பொது வெளியில் பேசினாலும் இவர்களின் பொது எதிரிகள் முஸ்லிம்கள் என்பதை நாங்கள் தெளிவாக அறிந்து உள்ளோம். ஆகவேதான், முஸ்லிம்களின் பாபர் மஸ்ஜித்தை தரைமட்டம் ஆக்கிய நிலையில் வேறு பல பள்ளிவாசல்களை உடைத்து அங்கும் கோயில்களை கட்ட  அவர்கள் திட்டம் தீட்டி செயல்படுத்த முனைந்து வருகின்றனர். இதற்கு அதிகாரம் அவர்கள் கையில் இருக்க வேண்டும். அதற்காகவே ஆர் எஸ் எஸ் அமைப்பின் அரசியல் முகமாக திகழும் பாரதிய ஜனதா கட்சி மூலம் தங்களின் கனவு திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றனர். இந்த நிலையில் இந்துத்துவ மற்றும் அந்த கொள்கை சார்ந்த  கடும் போக்குவாதிகள் முன்னேற்றம் அடைந்து வருகிற நிலையில் இந்தியா என்கிற மதச்சார்பற்ற தேசத்தின் ஆழமான வேர்கள் வலுவிழந்து வருவது இந்தியாவிற்கு மட்டும் அல்ல அதன் அண்டைய தேசங்களுக்கும் வருங்காலங்களில் மிகப் பெரிய சவாலாக அமையும் என்பதில் எந்தவொரு மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை என்பதை மட்டும் இந்த தருணத்தில் நான் பதிவு செய்து கொள்கிறேன்.



# இஸ்லாமிய வரையறைக்குள் சமூக ஊடகங்களின் பயன்பாடு



சத்தார் எம் ஜாவித்

தற்கால யுகத்தில் சமூக ஊடகங்கள் என்பது மனித வாழ்வியலில் இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளதுடன் அது மனிதனின் அன்றாட வாழ்வியலில் பின்னிப் பிணைந்து, ஊடகம் இல்லா விட்டால் மனிதன் இல்லையென்ற நிலைக்கு அதன் தாக்கம் பரந்து விரிந்து விட்டது.

ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார விடயங்களில் கூட தாக்கங்களை ஏற்படுத்தவும், சில வேளையில் ஒரு நாட்டின் ஆட்சியைக் கூட மாற்றியமைக்கும் வல்லமை கொண்ட ஒரு சக்தியாக இந்த ஊடகங்கள் விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது. ஆரம்பகால மனிதன் அச்சு ஊடகங்களின் வாயிலாக தமது தொடர்புகளை ஏனையவர்களுடன் வைத்திருந்து, அது சிறுகச் சிறுக முன்னேறி இலத்திரனியல் ஊடகத்தில் கால்பதித்து இன்று உலகமே வியக்குமளவிற்கு இலத்திரனியல் ஊடக கலாச்சாரத்திற்கு உட்பட்டு விட்டது எனலாம்.

இலத்திரனியல் ஊடகங்களின் துரித வளர்ச்சியும், அதன் முன்னேற்றமும் உலகை இன்று உள்ளங்கைக்குள் கொண்டு வந்து உலகில் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் நடைபெறும் விடயங்களை ஒரு நொடிப் பொழுதில் மனிதன் உலகின் எந்தத்திசைகளில் இருந்தாலும் அதனை இலகுவாகவும், தெளிவாகவும் அறிந்து கொள்ளும் அளவிற்கு முன்னேற்றமடைந்து விட்டது. இலத்திரனியல் ஊடகங்கள் என்று கூறும்போது அது தொலைக்காட்சி வடிவிலும், வானொலி வடிவிலும் வந்து இன்று இணையத் தளங்களினூடாக சமூக ஊடகங்களாக மாறி சகல விடயங்களையும் ஒரு நொடிப் பொழுதில் கேட்கவும், காணொளிகள் மூலமாகவும் பார்க்கவும், கண்டு கொள்ளவும் வழி சமைத்துள்ளது எனலாம்.

இணையத் தளங்களினூடான சமூக ஊடகங்களின் பாவனை என்பது இன்று உலகில் மனிதனைவிட அதிகரித்த ஒன்றாக மாறியுள்ளது எனலாம். அந்தளவிற்கு இளையோர் முதல் முதியோர் வரை இந்த இணைய சமூக ஊடகங்களின்பால் ஈர்க்கப்பட்டு உண்ண உணவு இல்லா விட்டாலும் பரவாயில்லை என்ற வகையில் சமூக ஊடகத்தின் ஆதிக்கம் மனிதனை முழுதாகவே ஆட்கொண்டு விட்டது எனலாம்.

முன்னைய காலத்தில் ஒரு மனிதன் அறிவைப் பெற வேண்டுமானால் அவன் பலதரப்பட்ட புத்தகங்களையும், நாவல்களையும் வாசிக்க வேண்டும் பத்திரிகைகளை தேடிப் பெற்றுப் படிக்க வேண்டும். அதன் மூலமே அவன் அறிவை வளர்த்துக் கொள்ள முடியும் என்ற கோட்பாடு இருந்து வந்தது. ஆனால் தற்கால யுகத்தில் மேற்படி விடயங்களுக்கு அப்பால் ஊடகத்துடன் தொடர்பை வைக்கும்போது அல்லது அதனை அறிந்து கொள்வதன் மூலம் அவன் முழுமையான அறிவை பரந்து பட்டளவில் பெற்றுக் கொள்ளலாம். என்றாலும் இது விடயத்தில் சாதக, பாதகத் தன்மைகளும் காணப்படுகின்றன என்ற விடயத்தினையும் பாவிப்போர் அறிந்திருத்தல் முக்கியமானதாகும்.

இந்த நவீனத்துவக் காலத்தில் சமூக ஊடகங்கள் பாவிப்பதில் இளையோரின் தொகையே உலகில் முன்னணி வகிக்கின்றது எனலாம். அந்தளவிற்கு இளைய தலை முறையினரின் ஆர்வம் இந்த வலைத்தளங்கள் மீது அவர்களை முழுமையாகவே உள் வாங்கியிருக்கின்றது எனலாம்.

நவீனத்துவமான இக்காலத்தில் உலகில் ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் விஞ்ஞான ரீதியான முன்னேற்றங்கள் காரணமாக புதிய புதிய கண்டு பிடிப்புக்களும், அவற்றின் அதிகரிப்புக்களும் அறிமுகப்படுத்தப்பட்டு வருவதுடன் பல விடயங்கள் கல்வி சார் விடயங்களாகவும் இருந்தாலும் அதனைவிட பன்மடங்கு எதிர்மாறான விடயங்களுக்கும் சமூக ஊடகங்களின் அறிமுகம் வழிவகுக்கின்றது எனலாம். இருந்தாலும் சமூக வலைத்தளங்களின் அதிகரிப்புக்கள் காரணமாக ஒவ்வொரு வலைத்தளங்களும் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு செய்திகளை வெளியிடுவதும், அவற்றை தரவேற்றம் செய்வதும் போட்டித்தன்மை வாய்ந்ததாக இருக்கின்றதை நாம் காண்கின்றோம்.

இவ்வாறான நிலையில் இந்தசமூக ஊடகங்கள் விடயத்தில் இளைய சமூகத்தினர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டிய விடயம் மிகமிக முக்கியமானதாகும். காரணம் இன்றைய நவீனத்துவ யுகத்தில் சமூக ஊடகங்கள் வேகமான செய்திப் பரிமாற்றல்களுக்கு முனைவதால் அதன் தாக்கம் இளைய சமூகத்தினரை கூடாத செயற்பாடுகளுக்கு அல்லது அவர்களைத் தீய வழிகளில் இட்டுச் செல்வதற்கு மூல காரணமாகவும் அமைகின்றன. சில வேளைகளில் மரணத்தையே ஏற்படுத்திய பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதுடன் தொடர்ந்தும் அரங்கேறி வருகின்றது எனலாம்.

அதிகமான சமூக ஊடகங்களில் இளைஞர்களை தீய வழியில் திசைதிருப்பக்கூடிய வகையில் ஆபாச விடயங்கள் தரவேற்றம் செய்யப்பட்டு அதனை அவர்கள் விரும்பியவாறு கண்டு கொள்வதற்கும் வழி சமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சமூகத்தில் பாரிய சமூகச் சீர்கேடுகள் இடம் பெறவும், பாலியல் நடவடிக்கைகள், தற்கொலைகள், கொலைகள், கடத்தல்கள் என பலவாறான சமூகச் சீர்கேடுகள் இடம் பெற்ற சம்பவங்கள் பல கடந்தகாலங்களில் இடம் பெற்றுள்ளன. இதனை இஸ்லாம் முற்றாகவே வெறுக்கின்றது. இவற்றை தவிர்ப்பதற்கு அல்லது அவற்றில் இருந்து விடுபடுவதற்கு இளைஞர்களிடத்தில் கவனமும், அவதானமும் தேவை என்பதுடன் பெற்றோர் பாதுகாவலரின் கண்காணிப்பு என்பதும் இன்றியமையாததாகும்.

சமூக ஊடகங்களைப் பாவிக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் இந்த விடயத்தில் நேரடியாகக் கவனஞ் செலுத்தா விட்டால் அது ஈற்றில் பாரிய பிரச்சினைகளை கொண்டு வந்து சேர்த்து விடும். குறிப்பாக பெண் பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டிய கடப்பாடும் முக்கியமானதாகும். இணையத்தள தொடர்புகள் மூலம் இஸ்லாமிய யுவதிகள் மாற்றுமத நபர்களை திருமணம் செய்யவும், அவர்களுடன் செல்வதற்கும் வழவகுத்த பல சம்பவங்கள் இலங்கையிலும் இடம் பெற்றுள்ளன. இதன் மூலம் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் பெற்றோர்களே.

இலங்கை போன்ற பல்லின, பல் சமய மக்கள் வாழும் இந்த நாட்டில் ஒவ்வொரு சமூகத்தினரும் இணையப் பயன்பாட்டு விடயத்தில் அதீத கவனஞ் செலுத்த வேண்டும். இந்தப் பாவனை மூலம் ஒரு சமூகம் மற்றைய சமூகத்தினரைப் பாதிக்கும் அல்லது அவர்களுக்குப் பாதகமான செயற்பாட்டு விடயங்களில் ஈடுபடக் கூடாது. குறிப்பாக பேஸ்புக், வட்ஸ்அப், ஐ.எம்.ஓ, வைபர் போன்ற இணைய வசதிகளைப் பாவிப்பவர்கள் தமது ஒவ்வொரு பதிவேற்றங்கள், செய்திப் பகிர்வுகளில் ஏனையவர்களைப் பாதிக்காத வகையில் உண்மைத் தன்மையுடன் செயற்பட்டால் அது நல்லதாக அமையும். இல்லா விட்டால் அது தேவையற்ற சமூகப் பிரச்சினைகளைக்கூட ஏற்படுத்தி விடும் என்பதனையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

மாணவர்களின் அறிவை வளர்க்கவும், அதனை மேம்படுத்தவும் இன்று பாடசாலை மற்றும் தனியார் கல்விக்கு அப்பால் ஊடகங்களும் கல்வித் துறையில் கால் பதித்து நவீன கல்வித்துறை வளர்ச்சியில் மாணவர்களுக்கு புதிய புதிய கற்றல் நடவடிக்கைகளையும், ஆசிரியர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும் இலகு முறைமைகளை புகட்டி வருகின்றது என்றால் அது தற்கால கல்வி வளர்ச்சிக்கான நல்லதொரு அடித்தளம் என்றாலும் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் ஊடகங்களின் பயன்பாட்டில் சில வரையறைகளை இஸ்லாமிய மாணவர்கள் என்ற வகையில் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் உள்ளது.

தற்போதைய நிலையில் இலத்திரணியல் ஊடகங்கள் என்ற வகையில் பல்வேறுபட்ட இணையதள வசதிகள் தாராளமாகவே காணப்படுகின்றது. இவற்றின் பயன்பாட்டிற்காக நவீன வகையான கையடக்கத் தொலை பேசிகள் புதுப்பது கண்டு பிடிப்புக்களில் அறிமுகமாகி வருகின்ற நிலையில் இளம் சமூகத்தினர் அதன்பால் அதிகமாக ஈர்க்கப்பட்டு வருகின்ற நிலைமைகள் பல்வேறுபட்ட பாதகமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் விடயங்களாக அமைவதுடன் அவ்வப்போது பிரச்சினைகளும் நடந்தேறி வருகின்றதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

அதிகமான பிரச்சினைகள் நவீன கையடக்கத் தொலைபேசியூடான இணையப் பாவனையாலேயே ஏற்படுகின்றன. குறிப்பாக பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இதனால் சீர்குலைகின்றன. பலர் மாணவர்களுக்கு பயனுள்ள விடயங்கள் என்று கூறினாலும் அதிகமான மாணவர்கள் கல்வி சார் விடயங்களில் அதனைப் பாவிப்பது என்பது மிகமிக அரிதானதே. குறிப்பாக மாணவர்கள் கார்ட்டூன் காணொளிகள், டிக்டொக், சினிமா சம்பந்தமான படங்களைப் பார்ப்பதே நடந்தேறி வருகின்றன. இவ்வாறான விடயங்களால் இளம் சமுதாயத்தின் கல்வியில் வீழ்ச்சிப்போக்கே அதிகம் காணப்படுகின்றது. ஒரு பாடத்திற்காக பயன்படுத்தும் இணையத்தள வசதி ஏனைய பாடங்களின் அல்லது அவற்றின் கற்றல் நடவடிக்கைகளில் குறைவை ஏற்படுத்தும் நிலைமைகளே அதிகம் காணப்படுகின்றன.

நவீனத்துவம் என்பதால் அவற்றினை நினைத்த மாதிரி பாவிப்பதற்கு இஸ்லாம் அனுமதிப்பதில்லை. மாறாக நல்ல பயனுள்ள மற்றும் இஸ்லாத்திற்கு ஏற்ற வகையில் இஸ்லாமிய மாணவர்கள் அவற்றைப் பாவிப்பதன் மூலமே நல்லதோர் முன்னேற்றத்தைக் கண்டு கொள்ள முடிவதுடன் பல்வேறுபட்ட பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கும் அது வழிசமைக்கும் எனலாம். ஒரு தவறான செய்தியை அல்லது தகவலை உரிய முறையில் அறிந்து கொள்ளாது பரிமாறுவதை தவிர்த்து ஒவ்வொருவரும் செயற்படுவதையே இஸ்லாமும் வலியுறுத்தியுள்ளது.

எனவே இஸ்லாமிய சமூகத்திற்கு நபியவர்கள் காட்டித்தந்த போதனைகளின்படி ஊடகமாக இருக்கலாம் அல்லது ஏனைய துறைகளாக இருக்கலாம் அனைத்திலும் முஸ்லிம்கள் ஏனையவர்களுக்கு முன்மாதிரியானவர்களாக வாழ வேண்டிய பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து வாழ வேண்டும் என்பதனையே நபியவர்களும் விரும்பினார்கள்.








நீரானது இன, மத வேறுபாடுகளின்றி முழு மனித இனத்தையும் அங்கமாக்கிக் கொண்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பொங்கல் விழா இன்று (17) அதன் தலைமை அலுவலக வளாகத்தில் சபைத் தலைவர் நிசாந்த ரணதுங்க தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உப தலைவர் சஞ்சீவ விஜயகோன், பொது முகாமையாளர் பொறியியலாளர் ருவன் லியனகே, மேலதிக பொது முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்களும் கலந்துகொண்டனர். (பேருவளை பீ.எம்.முக்தார்)





ஏ.எச்.ஏ. ஹூஸைன்

# 30 வருடங்களாக தொடரும் நிர்வாக உரிமை மறுப்பு

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர். 10)

அதிகார சூட்சுமங்களால் நிருவாக உரிமை மறுக்கப்பட்ட நிலையில் பெருமளவு நிலப்பரப்பை இழந்து இயங்கி வருகிறது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மற்றொரு முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவான கோறளைப்பற்று மேற்கு எனும் ஓட்டமாவடிப் பிரதேச செயலகப் பிரிவு.

இப்பிரதேச செயலகப் பிரிவின் தோற்றமும் பின்னணியும்

இனப்பாகுபாடு இல்லாமல் பிரதேச சபைப் பிரிவுக்கு ஒரு பிரதேச செயலகம் என்ற கொள்கையின் அடிப்படையில் அக்கொள்கை அமுல்படுத்தப்பட்டிருக்குமானால் ஓட்டமாவடி பிரதேசத்தை மையப்படுத்திய பிரதேச செயலகம் **1960**களிலேயே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை.

1985, 1990ஆம் ஆண்டுகளில் எல்ரீரீஈ இயக்கத்தினரால் கிழக்கில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட இன வன்முறைகளையும் முஸ்லிம்கள் மீதான கூட்டுப் படுகொலைகளையும் தொடர்ந்து கல்குடாத் தொகுதி முஸ்லிம்களுக்கும் வெளியில் நகரமுடியாத உயிரச்சுறுத்தல் இருந்தது.

அதனால் ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேச முஸ்லிம் மக்கள் அரச நிருவாகக் கடமைகளுக்காக மிக அருகிலமைந்திருந்த கோறளைப்பற்று எனும் தமிழர் பகுதியை அண்டிய வாழைச்சேனைப் பிரதேச செயலகத்திற்குச் செல்ல முடியாமற் போனது.

முஸ்லிம்கள் எதிர்கொண்டு வந்த பாதுகாப்பற்ற நிலைமை காரணமாக முஸ்லிம்கள் அரச நிருவாகக் கடமையை மேற்கொள்வதற்கு கோறளைப்பற்று மேற்கு எனும் ஓட்டமாவடிப் பிரதேச செயலகப் பிரிவு உருவாக்கப்பட்டது.

முதலில் பிரதேச செயலகமாக அன்றி மேலதிக உதவி அரசாங்க அதிபர் பிரிவாகவே அது 28.02.1990இல் ஸ்தாபிக்கப்பட்டது. அப்பிரிவு 01.01.1993 தொடக்கம் பிரதேச செயலாளர் பிரிவாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாக 1997.07.04ந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அதன் வடக்கு எல்லை பொலன்னறுவை மாவட்டம் வரையிலும்,

தென்மேற்கு எல்லை மாதுறு ஓயா வரையிலும் நீண்டு பரந்திருப்பதாக இதே வர்த்தமானி பிரகடனப்படுத்துகிறது.

அதாவது இதை எளிய முறையில் தெளிவுபடுத்துவதானால் மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே 34 கிலோமீற்றரில் ஓட்டமாவடி அமைந்துள்ளது. ஆகவே ஓட்டமாவடி பிரதேச செயலக விஸ்தீரணம் ஓட்டமாவடியிலிருந்து தொடங்கி பொலன்னறுவை மாவட்ட எல்லை வரை நீண்டிருக்கிறது. இப்பிரிவு 176.6 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது.

அந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு நிருவாக அலகாக உள்ள கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு (ஓட்டமாவடி) 14 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

மாஞ்சோலை, மீராவோடைமுஸ்லிம் மேற்கு, மீராவோடைமுஸ்லிம்கிழக்கு, ஓட்டமாவடி3, ஓட்டமாவடி1தெற்கு, ஓட்டமாவடி1வடக்கு, ஓட்டமாவடி2, காகிதநகரம், கள்ளிச்சை, வாகனேரி, வடமுனை, ஊத்துச்சேனை, புணாணைமேற்கு, தியாவெட்டுவான், ஆகிய பிரதேசங்கள் இப்பிரதேச செயலாளர் பிரிவினுள் அடங்குகின்றன.

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலகத்திலிருந்து பிரிந்து கோறளைப்பற்று மேற்கு எனும் ஓட்டமாவடி மேலதிக உதவி அரசாங்க அதிபர் பிரிவு இயங்கத் தொடங்கியதும் அதன் முதலாவது மேலதிக உதவி அரசாங்க அதிபராக எம்.ஏ.சி.எப். ஸாதிக் நியமிக்கப்பட்டார்.

இந்த மேலதிக உதவி அரசாங்க அதிபர் பிரிவு இயங்கத் துவங்கியதும் பிரதேச முஸ்லிம்கள் தமது நிருவாக அலுவல்களை அச்சமின்றி முடித்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பிரதேச செயலகம் மாவட்ட நிருவாகத்தின் தொடரான பாரபட்சங்களினால் தற்போது அதன் சட்டபூர்வமான நிருவாக எல்லைகளை இழந்து நெருக்குவாரப்படுகிறது.

கோறளைப்பற்று மேற்கு எனும் ஓட்டமாவடிப் பிரதேச செயலகம் தற்போது மீராவோடைமேற்கு, மாஞ்சோலை, மீராவோடைகிழக்கு, ஓட்டமாவடி3, ஓட்டமாவடி1தெற்கு, ஓட்டமாவடி1வடக்கு, ஓட்டமாவடி1, காகிதநகர் ஆகிய 8 கிராம அலுவலர் பிரிவுகளோடு 8668 குடும்பங்களுடன் 27476 சனத் தொகையைக் கொண்டு இயங்கி வருகின்றது. பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் தரவுகளில் இந்த விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கோறளைப்பற்று மேற்கு எனும் ஓட்டமாவடிப் பிரதேச செயலக நிருவாகத்தின் கீழ் 1997.07.04ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட வடமுனை, ஊத்துச்சேனை, கள்ளிச்சை, புணாணைமேற்கு, வாகனேரி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் ஓட்டமாவடிப் பிரதேச செயலகத்தினால் நிருவாகம் செய்ய முடியாமல் மாவட்டச் செயலக நிருவாகத்தினால் தடுக்கப்பட்டுள்ளன.

இங்கெல்லாம் முஸ்லிம்கள் விவசாயம் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுக் கொண்டு பூர்வீகமாக வாழ்ந்து வந்துள்ளார்கள்.

அரசாங்க வர்த்தமானி அங்கீகாரமுள்ள ஓட்டமாவடிப் பிரதேச செயலக நிருவாகப் பிரிவிலிருந்து 158.0 சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பைக் கொண்ட 05 கிராம அலுவலர் பிரிவுகளை மாவட்ட நிருவாகம் தடுத்து வைத்துக் கொண்டு அதனை பிரதேச மக்களின் எந்தவித அங்கீகாரமுமின்றி கிரான் செயலகப் பிரிவுடன் இணைத்துள்ளது.

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்திற்கு இருந்த 176.6 சதுர கிலோ மீற்றர் நிலத்தில் 172 கிலோமீற்றர் பறித்தெடுக்கப்பட்ட நிலையில் தற்சமயம் வெறும் 4 சதுர கிலோ மீற்றர் மாத்திரமே கைவசம் உள்ளது.

அந்த நிலப்பரப்பிற்குள்தான் 9000 குடும்பங்களைக் கொண்ட சுமார் 30000 பேர் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். ஒரு சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்குள் சுமார் 5120 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இது முஸ்லிம்களுக்கு எதிராக நன்கு திட்டமிட்டு செய்யப்படுகின்ற மாவட்ட அதிகார மட்டத்தின் அநியாயமாகும் என்று மக்கள் வேதனையும் விசனமும் அடைகின்றனர்.

இதேவேளை அருகிலுள்ள கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்கு ஏற்கெனவே 510 சதுர கிலோ மீற்றர் மொத்த நிலப்பரப்பு உள்ளது. ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவிலிருந்து பலாத்காரமாகப் பறித்தெடுத்து கிரான் பிரதேச செயலகத்திற்கு நிருவாகம் செய்ய வழங்கப்பட்டுள்ள 158 சதுர கிலோமீற்றரையும் சேர்த்தால் அதன் மொத்த நிலப்பரப்பு 668 சதுர கிலோமீற்றராக வருகிறது.

தற்காலிகமான இணைப்பு என்று கூறி கிரான் பிரதேச செயலகப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ள வடமுனை, ஊத்துச்சேனை, கள்ளிச்சை, புணாணைமேற்கு, வாகனேரி ஆகிய பெரும் நிலப்பரப்புக் கொண்ட கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள பெரும்பான்மையான காணிகள் ஓட்டமாவடி வாழைச்சேனை பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு சொந்தமானதாக இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் மொத்தம் 2633.10 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டது.

இதனை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுக்கும் சரிசமமாகப் பகிரப்படுமாயின் ஒரு செயலக பிரிவுக்கு 188.08 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டமைந்திருத்தல் வேண்டும்.

ஆனால், தற்போது கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச செயலகத்திற்கு உள்ள காணியின் விஸ்தீரணம் வெறும் 4 சதுர கிலோ மீற்றராகவும் காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவு 6.6 சதுர கிலோமீற்றர் என்று கூறப்பட்டாலும் அது பௌதீக நடைமுறையில் 2.86 சதுர கிலோமீற்றராக மட்டுமே உள்ளது என்று அங்குள்ள ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவு 3.74 சதுர கிலோமீற்றர் ஆகவும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவின் பரப்பளவு 6 சதுர கிலோமீற்றராகவும் வழங்கப்பட்டுள்ளதோடு ஒட்டு மொத்தத்தில் மாவட்ட முஸ்லிம்கள் அனைவரும் மனித அவல நெருக்கடிக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

**3.8.1.1 Distribution of Population Sex by G.N. Divisions**
**D.S. Division - 2020**

| S.No | GN Division | GN Code | Toal No.of Families | No.of Families: Men Headed Families | No.of Families: Women Headed Families | Total Population | Sex: Male | Sex: Female |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 207-Meeravodai West | 207 | 1,050 | 937 | 113 | 3,292 | 1,612 | 1,680 |
| 2 | 207A-Mancholai | 207A | 1,273 | 829 | 444 | 4,132 | 1,944 | 2,188 |
| 3 | 207B-Meeravodai East | 207B | 1,192 | 1,059 | 133 | 3,582 | 1,772 | 1,810 |
| 4 | 208-Oddamavadi-03 | 208 | 865 | 751 | 114 | 2,767 | 1,376 | 1,391 |
| 5 | 208B-Oddamavadi 01 South | 208B | 822 | 710 | 112 | 2,669 | 1,376 | 1,293 |
| 6 | 208B/2-Oddamavadi 01 Norh | 208 B/2 | 1,067 | 878 | 189 | 3,469 | 1,701 | 1,768 |
| 7 | 208C- Oddamavadi 02 | 208C | 821 | 639 | 182 | 2,673 | 1,329 | 1,344 |
| 8 | 210B- Paper Town | 210B | 1,578 | 1,354 | 224 | 4,892 | 2,391 | 2,501 |
| | Divisional Total | | 8,668 | 7,157 | 1,511 | 27,476 | 13,501 | 13,975 |

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர்.. வரும் வாரமும் வரும்)



# உலகின் முதல் ஸ்மார்ட் சிட்டி மன்றம் சவூதி தலைமையில்..

உலகின் முதல் ஸ்மார்ட் சிட்டி மன்றத்தை சவூதி அரேபியாவின் தரவுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆணையம் (SDAIA) வருகின்ற பெப்ரவரி மாதம் 2 முதல் 13 வரை சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் நடாத்த தீர்மானித்துள்ளது. எரெனா என்ற கண்காட்சிகளுக்கான அரங்கத்தில் நடக்கவிருக்கும் இம்மன்றத்தில் 40க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 80 பேச்சாளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வைப் பற்றி SDAIA இன் தலைவர் கலாநிதி அப்துல்லா பின் ஷரஃப் அல்-ஹம்தி கருத்து தெரிவிக்கையில், "இந்த உலகளாவிய மன்றமானது ஸ்மார்ட் நகரங்கள் என்றால் என்ன என்பது பற்றியும் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தையும் அறியப்படுத்தும் வகையில் அமையப்பெறவுள்ளதோடு, இந்த நகரங்களை உருவாக்க செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்றும் தெளிவூட்டவுள்ளது" என கூறினார். சவூதி அரேபியாவின் பிரதமர் மற்றும் ளுனுயுஐயு இன் இயக்குனர்கள் குழுவின் தலைவருமான பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களின் வழிகாட்டலுக்கு இணங்கவே இந்த மன்றத்தை ஏற்பாடு செய்வதில் அரபு இராச்சியம் ஆர்வம் காட்டியதாகவும் அவர் கூறினார். தரவுகள் மற்றும் யுஐ அமைப்பு, மேம்பாடு மற்றும் சவூதியில் அதன் செயல்பாடுகளுக்கான தேசியக் குறியீடாக SDAIA இன் முக்கியப் பங்கையும் அவர் எடுத்துரைத்தார்.

மேம்பட்ட தொழில்நுட்பங்களின் துரித வளர்ச்சியை அங்கீகரிக்கும் விதத்தில் உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் தங்கள் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த யுஐ போன்ற தொழிநுட்பங்களை பயன்படுத்தியும் அவற்றை மேம்படுத்தியும் வருகின்றன. இதற்கு சவூதி அரேபிய இராச்சியமும் விதிவிலக்கல்ல.

ஸ்மார்ட் நகரங்களின் எதிர்காலம் பற்றிய கலந்துரையாடல், அவற்றின் உட்கட்டமைப்புடன் தொடர்புடைய சவால்களை எதிர்கொள்ளுதல் மற்றும் உலகெங்கிலும் உள்ள நகரங்களில் வளர்ந்து வரும் மக்கள் தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான புதுமையான தீர்வுகளை ஆராய்வதுடன் சம்மந்தப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் அமர்வுகளை இம்மன்றம் கொண்டிருக்கும்.

மேலும், 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு (SDGs) இணங்க, ஸ்மார்ட் நகரங்களை நிறுவுவதில் சவூதி மற்றும் பிற நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றங்களையும் இம்மன்றம் எடுத்துக் காண்பிக்கவுள்ளது.

இம்மன்றமானது 18 000 க்கும் மேற்பட்ட பார்வையாளர்களை நேரிலும் நிகழ்நிலையிலும் ஒன்றுசேர்த்து நடத்தவுள்ளதோடு, ஸ்மார்ட் நகரங்கள் மற்றும் யுஐ தொழில்நுட்பங்களை நிர்மாணிப்பதில் நிபுணத்துவம் பெற்ற உலகெங்கிலும் உள்ள நிபுணர்களை ஒன்றிணைக்கும் வகையில் ஸ்மார்ட் நகரங்களுக்கான உலகளாவிய தளத்தையும் நிறுவுகிறது.

உலகளாவிய நகரங்கள், நகர்ப்புற நடமாட்டத்தின் எதிர்காலம், ஸ்மார்ட் பொது சேவைகள், அடுத்த நூற்றாண்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்தவகையிலான நகரங்களை உருவாக்குவதற்கான திட்டமிடல், மேம்படுத்தப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளை இம் மன்றத்தில் கலந்துரையாடவுள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு யுஐ மற்றும் தொழிநுட்பவியலோடு சம்மந்தப்பட்ட சவூதியின் இவ்வாறான முன்முயற்சிகள் அனைத்தும் அந்நாட்டின் விஷன் 2030 திட்டத்திற்கமைவாகவே இடம்பெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**காலித் ரிஸ்வான்**

## கற்பிட்டி விஞ்ஞான செயற்திட்ட பிரிவின் விருது வழங்கும் இரவு விழா

(எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி விஞ்ஞான செயற்த்திட்டப் பிரிவின் விருது வழங்கும் இரவு விழா இரண்டாவது முறையாகவும் கற்பிட்டி வன்னிமுந்தல் டிரீம் ஹவுஸ் முற்றவெளியில் கற்பிட்டி விஞ்ஞான செயற்த்திட்டப் பிரிவின் தலைவரும் கற்பிட்டி கோட்டக் கல்விக் காரியாலயத்தின் விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகருமான எம்.ஜீ.எம் ஹிசான் தலைமையில் நடைபெற்றது.



இவ் விருது வழங்கும் இரவு விழாவின் பிரதம அதிதிகளாக வெளி மாவட்டங்களில் இருந்து வந்து கற்பிட்டி மாணவர்களுக்கு கல்வி வழங்கி வரும் பௌதீகவியல் ஆசிரியர் எஸ். கனேஷன், மற்றும் ஏ.என் அப்ராஹ், உயிரியல் ஆசிரியர் ஏ.எம் நஜீப், இரசாயனவியல் ஆசிரியர் எம்.வசீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், நிகழ்வில் 2024 ம் மற்றும் 2025 ம் ஆண்டு உயர்தர பரீட்சை எழுத உள்ள மாணவர்களுக்கு வெவ்வேறு பரீட்சைகள் நடாத்தப்பட்டு மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் விருதுகள் வழங்கப்பட்டதுடன் மேலும் பல்கலைக்கழகங்களில் மருத்துவ மற்றும் பொறியியல் பீடங்களில் கல்வி பயிலும் மாணவர்களால் கற்பிட்டி விஞ்ஞான செயற்த்திட்ட மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றது. அந்த பல்கலைக்கழக மாணவர்களும் இவ் விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ். முஸ்லிம் சமூக ஜோதி விருது 2024

யாழ். முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பால் அவர்களின் ஏற்பாட்டில் இரண்டாவது முறையாக வழங்கவிருக்கும் "யாழ் முஸ்லிம் சமூக ஜோதி" விருது 2024 ஆம் ஆண்டுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் சமூகப்பற்றுள்ள கல்வியியலாளர் மஹ்றூப் ஏ.காதர், முன்னாள் யாழ் மத்திய கல்லூரி, சிறந்த கிரிக்கெட் வீரர் அபூபக்கர் சுல்தான், கவிஞர் யாழ் அஸீம், முன்னாள் யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட நட்சத்திர கோல் கீப்பர் எம்.எம். முனாஸ். ஆகிய நால்வரும் ஆவார்கள்.

யாழ் முஸ்லிம் சமூக ஜோதி விருது 2024 விருதுக்கு எஸ்.எம்.மீரான் ஸாஹிப் பௌண்டேஷன் சார்பாக எம்.எஸ்.ஜாபிர் அவர்கள் அனுசரணை வழங்குகிறார்.

**இம்தியாஸ் பாக்கீர் மாகாரின்**

## மகேகதாவ நூல் வெளியீடு




பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாகார் எழுதியுள்ள " மகேகதாவ (எனது கதை) என்ற வாழ்க்கைச் சரிதை நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் மார்ச் 5ம்திகதி மாலை 3.45 மணிக்கு கொழும்பு ஆனந்த கல்லூரி குலரத்ன மண்டபத்தில் நடைபெறும். சிங்களத்தில் வெளியிடப்படும் இந்த நூல் விரைவில் தமிழ், ஆங்கில மொழிகளிலும் வெளியிடப்படவுள்ளது.

## நானா நீயா அவனா?



சபீர் மொஹமட்

# யாரை எதிர்ப்பது, யாரை ஆதரிப்பது, யார் தீர்மானிப்பது!

ஒவ்வொரு வருடமும் இலங்கையில் கிட்டத்தட்ட முப்பதாயிரம் மாணவர்கள் அரச பல்கலைக்கழகங்களுக்குள் நுழைகின்றார்கள். 13 வருட பாடசாலை கல்வியின் பின் பல்கலைக்கழகம் சென்று அதன் பின்னர் தொழில் சந்தைக்கு இவர்கள் திறந்து விடப்படுகின்றார்கள். பல்கலைக்கழகம் சென்றால் தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என எந்தவொரு விதியும் இல்லை. ஆனால் அந்த 30,000 பேருக்கு எதற்காக இலவசமான உயர்கல்வியை அரசு வழங்க வேண்டும். சராசரி ஒரு குடிமகனை விட அரச பல்கலைக்கழகம் ஒன்றில் படித்த ஒரு குடிமகனிடம் அறிவை விட வேறு ஒன்றை இந்த சமூகம் எதிர்பார்க்கின்றது. பல்கலைக்கழகங்கள் சமூக சிந்தனையுள்ள பகுத்தறிவுசார் மாணவர்களை உருவாக்குகின்றார்களா?

இந்த பத்தியானது இலங்கையில் இரு வேறு துருவங்களில் இருக்கின்ற இரண்டு அரச பல்கலைக்கழகங்களில் நிகழ்ந்த இரண்டு சம்பவங்களை ஒப்பிடாக வைத்து ஒரு கேள்வியை உங்களிடம் கேட்கின்றது. தனிப்பட்ட ரீதியில் எந்த ஒரு நபரையும் இங்கே ஒப்பிடவில்லை. மாறாக பல்கலைக்கழகங்களையும் அதனுள் திணிக்கப்பட்டுள்ள அரசியலையுமே பேசுகின்றது.

மாணவர் அரசியல். இது இலங்கை வரலாற்றை பல சந்தர்ப்பங்களிலும் புரட்டி போட்ட ஒரு வசனம். த்ரிமா, வெனுர முதல் அநுருத்த, வசந்த முதலிகே வரை இவர்கள் வெவ்வேறு மாணவர் அரசியல் கொள்கைகள் மற்றும் போராட்டங்கள் மூலம் வெவ்வேறு காலங்களில் இலங்கையில் பேசப்பட்ட போராளிகள். (எதிர் வருகின்ற வாரங்களில் இவர்கள் பற்றி எழுதவுள்ளேன்) அதேபோல் இலங்கை அரச பல்கலைக்கழகங்கள் சில இன்றளவில் வெவ்வேறு அரசியல் அமைப்புகளின் பயிற்சி நிலையங்களாக மாற்றம் பெற்றும் உள்ளன. அரசியல் என்பது எவராலும் மறுக்க முடியாத எமது அடிப்படை உரிமை. அதேபோல் ஒரு சில அரச பல்கலைக்கழகங்களில் பலவந்தமாக மாணவர்களுக்கு அரசியல் அமைப்புக்கள் அவர்களுடைய கொள்கைகளை திணிப்பதாக குற்றச்சாட்டுகளும் எழுகின்றன.

கடந்த வாரம் சமூக வலைத்தளங்களில் அதிகமாக பேசப்பட்ட ஒருசில தலைப்புகளில், களனி பல்கலைக்கழகத்திற்கு சிறப்பு விருந்தினராக சொற்பொழிவொன்று ஆற்றுவதற்கு வந்த "டட்லி சிறிசேன" ஒரு பிரதான கதாபாத்திரமாகும். பல கோணங்களிலும் 'டட்லி' இலங்கையர்களுக்கு மறக்க முடியாத ஒரு பெயர். ஒரு சாராருக்கு அரிசி ஆலை உரிமையாளர் போல் இன்னொரு சாராருக்கு டட்லி அரிசியை பதுக்கி வைத்து கொள்ளைலாபம் காண்கின்ற ஒரு பொருளாதார கொலைகாரன். எவ்வாறாயினும் டட்லி சிறிசேன இன்று எமது நாட்டின் ஒரு மிகப்பெரிய பணக்காரர்.

களனி பல்கலைக்கழகத்தின் வெகுசன ஊடக துறையின் அழைப்பை ஏற்று களனி பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்த "டட்லி சிறிசேன" அங்கே தனது சொற்பொழிவை ஆற்றிவிட்டு அங்கிருந்து வெளியேறும் போது களனி பல்கலைக்கழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு அரசியல் கொள்கை சார்ந்த மாணவர் அமைப்பு தமது கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தார்கள். அவருடைய வாகனத்தை இடைநாடுவே மறித்து குறித்த எதிர்ப்பை தெரிவிக்கின்ற காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டன. பலர் இந்த சம்பவம் குறித்து வெவ்வேறு கோணங்களில் தமது விமர்சனங்களை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருந்தனர். ஒன்று: அவ்வாறு செய்தது தவறு. மற்றையது: மாணவர்கள் சரியாக செய்தீர்கள், வாழ்த்துக்கள் !

பேராதனை பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரொருவர் தனது முகநூல் பக்கத்தில், இந்த சம்பவத்தை "டட்லி சிறிசேனவின் கோணத்தில் பார்க்கும்போது அவருக்கு நிகழ்ந்த விடயம் மிகவும் கவலை தருகின்றது. ஏனெனில் டட்லி சிறிசேன என்ற, தனது துறையில் வெற்றி பெற்ற தொழில்முனைவாளருக்கு களனி பல்கலைக்கழகம் ஊடாக கிடைத்த ஒரு அழைப்பின் பேரிலேயே அவர் அங்கு சென்றிருந்தார். ஆனால் இங்கே தனக்கு வேதனை தருகின்ற விடயம், "டட்லி சிறிசேன போன்ற ஒரு ஒருவரை பிரதான விருந்தினராக சொற்பொழிவாற்ற அழைப்பு விடுக்கின்ற நிலைக்கு இலங்கை அரச பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளர்கள் தள்ளப்பட்டுள்ளமை" என குறிப்பிட்டிருந்தார்.

அடுத்த சம்பவம், கடந்த 2023 அக்டோபர் மாதம் 31ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக சட்டதுறை ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. அதிலே 'நெருக்கடிக் காலங்களில் நீதித்துறையின் சுயாதீனம்' எனும் தலைப்பில் ஒரு உரையை ஆற்றுவதற்கு மனித உரிமை ஆர்வலர் மற்றும் சட்டத்தரணி ஸ்வஸ்திகா அருலிங்கம் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் குறித்த நிகழ்வு நடைபெறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு சட்டத்தரணி ஸ்வஸ்திகா, பொது மேடையொன்றில் "விடுதலைப் புலிகள் ஒரு பாசிச அமைப்பு" என கூறியதன் காரணமாக குறித்த நிகழ்வு ரத்து செய்யப்பட்டது. இந்த நிகழ்வை ரத்து செய்தமை குறித்து யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் விளக்கம் அளிக்கையில், சுவஸ்திகாவின் கருத்து காரணமாக மாணவர்கள் உணர்ச்சிவசப்பட்டிருப்பதாகவும் அதனால் குறித்த நிகழ்வை பல்கலைக்கழகத்தில் நடாத்துவது சாத்தியமற்ற ஒரு விடயம் என்பதுடன் சுவஸ்திகா புலிகளைப் பாசிச அமைப்பு என விளித்ததில் தங்களுக்கும் உடன்பாடில்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கருத்துச் சுதந்திரம் இல்லாத ஒரு நிலையில், நீதித்துறையின் சுதந்திரம் குறித்து பேசுவதற்காக சட்டத்துறை ஸ்வஸ்திகாவை அழைத்தது முரண்நகை எனவும் பேச்சு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கு ஊக்கம் கொடுக்க வேண்டிய பல்கலைக்கழகமே இது போன்ற ஒரு விரிவுரையை ரத்து செய்வதென்பது பல்கலைக்கழகத்திற்குள் காணப்படுகின்ற பக்கச்சார்பான அரசியலை தெளிவாக காட்டுகின்ற ஒரு ஆபத்தான முன்னுதாரணம் என ஸ்வஸ்திகா அருலிங்கம் தமது பதில் கடிதத்தில் கூறியிருந்தார்.

யாழ். பல்கலைக்கழகம் இந்த சம்பவத்தை அணுகிய விதம் தொடர்பில் பல எதிர்ப்புகள் சமூகத்தில் எழுந்தன. அவர்களுடைய மிகப்பெரிய விமர்சனமாக காணப்பட்டது யாழ் பல்கலைக்கழகம் நடுநிலைக் கொள்கையை பேணாமல் பக்க சார்பாக நடந்து கொண்டதுடன் மாணவர்களின் துறை சார்ந்த அறிவுத்தேடலையும் அவர்களின் விமர்சன ரீதியான சிந்திக்கும் திறனையும் எவ்வாறு புறக்கணித்தது? என்பதாகும்.

இந்த இரு வேறு சம்பவங்களும் இலங்கையின் பல்கலைக்கழகங்கள் பற்றியும் அதனுள் காணப்படுகின்ற அரசியல் பற்றியும் அதனை வெளி சமூகம் அணுகுகின்ற விதம் பற்றியும் பல கேள்விகளை எம் மத்தியில் விட்டுச் சென்றுள்ளது.

ஸ்வஸ்திகா அருலிங்கத்திற்கு யாழ் பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதற்கு கூட அவகாசம் கிடைக்கவில்லை. காரணம் அவர் விடுதலை புலிகளை ஒரு பாசிச அமைப்பு என கூறியமை. அதேபோல் டட்லி சிறிசேன களனி பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்கே அவருடைய விரிவுரையை ஆற்றி வெளியே வரும்போது மாணவர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். அவ்வாறு தெரிவித்த எதிர்ப்புக்கு கூட பலரும் தமது விமர்சனங்களை வெளியிட்டு இருந்தனர். டட்லி சிறிசேன மற்றும் ஸ்வஸ்திகா அருலிங்கம் ஆகிய இருவரையும் ஒருபோதும் சமமாக கொள்ள முடியாது. ஆனால் வாசகர்களிடம் கேட்பது 'இந்த இரு வேறு சம்பவங்களிலும் இரு வேறுபட்ட சந்தர்ப்பவாத அரசியல் கொள்கைகள் ஒருமித்து செல்கின்றது' என்றால் அது சரியா ?

யாரை அழைக்க வேண்டும்? யாரை விரட்ட வேண்டும்? யாருக்கு யார் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்? எதற்காக எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்? இவை எல்லாவற்றையும் யார் தீர்மானிப்பது! பொதுவாகவே இலங்கையில் மாணவர் அரசியல் என்பது பல்கலைக்கழன்களைப் பொறுத்து வேறுபடுகின்றது. களனி பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற மாணவர் அரசியல் கொள்கையும் யாழ் பல்கலைக்கழகத்தின் மாணவர் அரசியல் கொள்கையும் இரு வேறு விதமானவை. ஸ்வஸ்திகாவிற்கு கடந்த வருடம் எதிர்ப்பு தெரிவித்த போது அதனை விமர்சித்தவர்கள் ஏன் டட்லி சிறிசேனவிற்கு வந்த எதிர்ப்பையும் அதனை தெரிவித்த மாணவர்களையும் கொண்டாடினார்கள். இது ஒரு கேள்வி. இந்த இரண்டு பல்கலைக்கழகங்களிலும் ஏன் எதிர்ப்பை தெரிவிக்கின்ற மாணவர்களால், குறித்த அதிதியை மேடைக்கு ஏற்றி அங்கே வைத்து தர்க்கரீதியில் கேள்விகளைக் கேட்டு தமது திறமையைக் கொண்டு ஏன் விமர்சிக்க முடியாது ?

பல்கலைக்கழகங்களுக்கு யாரை அழைக்க வேண்டும் யாரை அழைக்கக்கூடாது என்பது இங்கே தர்கம் அல்ல. ஏனென்றால் உலக பல்கலைக்கழக தரவரிசைகளில் முதல் ஐந்து இடங்களில் காணப்படுகின்ற முஒகழசன பல்கலைக்கழகம் கூட கடந்த ஆண்டு நீல திரைப்படங்களில் நடிக்கின்ற ஒரு நடிகையை தமது பல்கலைக்கழகத்திற்கு விசேட கலந்துரையாடல் ஒன்றுக்காக அழைத்திருந்தனர். உலகளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்கள் என்பது எமது கற்பனைக்கு எட்டாத அளவிற்கு பரந்த விசாலமான ஒரு றழசன "சொல்" என்பதை விட Concept "கருத்தாக" மாறி உள்ள நிலையில் நாம் எங்கே சென்று கொண்டிருக்கின்றோம்.

இங்கே உள்ள பிரச்சினை பல்கலைக்கழகங்களா? அல்லது அதனுள் திணிக்கப்பட்டுள்ள அரசியலா?






நாச்சியாதீவு பர்வீன்

# கலாநிதி ஆ.ஊ. ரஸ்மினின் போர்க்கால சிங்கள இலக்கியங்கள்

## (ஒரு பன்மைத்துவ ஆய்வு 1983–2007)

**அஷ்ஷேக். பிஸ்தாமி அஹமட் மல்வானை.**

சற்று வித்தியாசமாக இரண்டு இலக்கியங்களுக்கிடையிலான ஒப்பீடு தொடர்பான நூலொன்றுடன் உங்களோடு உரையாட உள்ளோம்.

இலங்கையில் மூன்று தசாப்தமாக வேர்கொண்டு உயிரையும் உடமைகளையும் விழுங்கிய யுத்தத்துக்கு மொழி குறித்த இழுபறியும் புறக்கணிப்பும் தான் காரணம். மொழி ஒரு கலாசாரம். மொழி ஒரு பண்பாடு. மொழி இலக்கியத்தின் உந்து விசை.

இப்படி இருக்கையில் பன்மைத்துவ சூழலில் ஒரு இனம் இன்னொரு இனத்தை துவம்சம் செய்து இனசுத்திகரிப்புக்கு ஆளாக்க எத்தனிக்கும் அம்சம் எந்த மனசாட்சியுள்ளவர்களாலும் அங்கீகரிக்க முடியாத ஒன்று. மொழி ஆதிக்கம் பயங்கரமானது.

மொழியால் நடந்த இத்தகைய கொடூர யுத்தத்தின் ஆறாத வடுக்களை போர்ச்சூழலிலும் அதன் பிற்பாடும் சிங்கள இலக்கியத்தின் பிரதிகள் எவ்வாறு கையாண்டன என்பது குறித்தே நூல் கலந்துரையாடுகிறது.

வரலாற்றின் முடிவும் இறுதி மனிதனும் வுாந நனெ ழக வாந ாளைவழசல யனெ வாந டயளவ அயெ என்றொரு நூலை குசயனெஉளை குரமரலயஅய எழுதி அமெரிக்காவுக்கும் சோவியத் ரஷ்யாவுக்கு மிடையிலான நீண்ட பனிப்போர் உழடன றயச முடிவுக்கு வந்து விட்டதாகவும் அமெரிக்காவிடம் உலகம் சரணடைந்ததுடன் உலக வரலாறு முடிவுறுகிறது என்பது அதன் சாராம்சம்.

இதனை எதிர்த்து மறுத்து அவ்வாறில்லை. வரலாறு இத்தோடு முடியவில்லை. அது எதிர்காலம் வரை இன்னும் நீள்கிறது. பலமான நாகரீகங்களுக்கிடையிலான பெரும் மோதலாக அது பரிணமிக்கும் என்று அமெரிக்க சிந்தனையாளர் ளுயஅரநட். உரவெைபெவழெ வுாந உடயளா ழக உைைடைணையவழைெ வாந சுநஅயசமைபெ ழக றுழசடன ழசனநச எனும் இன்னொரு நூலை எழுதினார்.

உலகின் வரலாறு முற்றுப்பெறவில்லை. அது புதிய உலக ஒழுங்கின் பெயரில் நீடித்து நாகரீகங்களுக்கு இடையிலான பெரு மோதலாக முரண்பாடாக வெடிக்க உள்ளது என்பதே இதன் சாரம். அமெரிக்க தலைமயிலான ஓர் உலகின் பால் அது கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இப்படி மேற்குலகின் பார்வை சண்டைக்கும் முரண்பாட்டுக்கும் தூபமிடுவதாக உள்ள நிலையில் தான் அதன் சர்வதேச அரசியலும் ராஜதந்திரமும் தொடர்கிறது.

ஆனால் இலங்கை சூழலில் யுத்தத்தின் ரணகளத்தை சுவைத்து அதன் வலிகளை சுமந்து வாழும் நிலையில், ரஸ்மின் இலங்கையில் உயிர்வாழும் இரண்டு மொழிகளின் இலக்கியங்களுக்கூடாக சமாதானத்தை, இணக்கப்பாட்டை, இன நல்லிணக்கத்தை, அன்பை, நன்மதிப்பை விதைக்க முனைகிறார்.

ரஸ்மின் பேராதனையின் தமிழ் துறையின் விஷேட பட்டதாரி. அபிவிருத்திக்கான தொடர்பாடல் துறையில் அங்கேயே விஞ்ஞான முதுமாணி பட்டமும் பெற்றவர். மேற்கு நாடான கனடாவின் ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் நவீன ஊடகம் தொடர்பான பட்ட பின்படிப்பு டிப்ளோமா ஒன்றையும் பெற்றுள்ளார். அதிகமான நூல்களை எழுதியுள்ளார். மொழிபெயர்த்துள்ளார். மாநாடுகளுக்கு ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார்.

பன்முக ஆளுமையாக நின்று பல்வேறு பாத்திரங்களை வகித்து சமூகத்தில் முனைப்புடன் ஊடாடி வருகிறார். சமூக வலுவாக்கம் தொடர்பில் சர்வதேச தரம் வாய்ந்த வளவாளராக செயற்படுகிறார்.

ரஸ்மின் சிங்கள மொழியில் மிகுந்த தேர்ச்சி மிக்கவர் என்பது ஆய்வினூடாக புரிந்துகொள்ளலாம். ஆய்வுக்கு தெரிவு செய்துள்ள தலைப்பு அவரது இலக்கிய ஈடுபாட்டை மட்டுமன்றி மொழியின் ஆகர்ஷ ணம் அதன் ஊடாட்டத்தினூடாக இலங்கையின் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் மீளவும் உருவாக்க இலக்கியத்தை எவ்வாறு கையாளலாம்? அதன் சாதக, பாதக தன்மைகள் குறித்தான பார்வையாகவே உள்ளது.


மிகப்பெரும் ஆய்வுக்களம் ஒன்றை நோக்கிய முதல் எட்டை காத்திரமாக முன் எடுத்து வைத்துள்ளார். துறை சார் ஆர்வலர்களுக்கும் நிபுணர்களுக்கும் பாதையை காட்டியுள்ளார்.

இலங்கை பன்மைத்துவம் நிலவும் ஓர் அழகான தேசம்.மூன்று தசாப்தம் கடந்த யுத்தம் அதன் அழகை குரூரமாக சிதைத்துள்ளது . இனங்களுக்கிடையில் முருகலையும் உட்பூசலையும் உடைவுகளையும் முறிவுகளையும் ஏற்படுத்தி இடைவெளியை இன்னுமின்னும் அதிகரித்து முரண்பாட்டுக்கு வழியமைத்துள்ளது. இந்த பகை புலனில் நின்று தான் ரஸ்மின் தனது ஆய்வின் எல்லையை காலத்தால் வரையறுத்துள்ளார்.

இனம், மொழி, பண்பாடு, கலாசாரம் என்று வித்தியாசமான சூழலில் வாழும் ஒரு நாட்டில் நிலையான சமாதானத்தை வேண்டி நிற்கின்றோம். குரூரமாக எம்மை காவுகொண்ட யுத்தம் நிறைவுற்றாலும் இனங்களுக் கிடையிலான முழுமையான சமாதானமும் நல்லிணக்கமும் இன்னும் மன நிறைவான விதத்தில் எழுகோலம் பெறவில்லை. நிலைக்கவில்லை.

முஸ்லிம் சமூகத்தின் புத்தி ஜீவிகளும் எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் குறிப்பாக சிங்கள இனத்தவருடன் மட்டும் சகவாழ்வை சுருக்கி பேசியும் எழுதியும் வருகின்றனர். சகவாழ்வின் ஊடாக மட்டும் நிலையான சமாதனம் மலராது, கறை படிந்த பக்கங்கள் நீங்காது.

இனங்களுக்கிடையிலான் உரையாடல் வைெநச கயவைா னயடைழபந மட்டும் எதையும் போதுமாக சாதிக்காது. இந்த முரண்பாடுகள் முழுமையாக நீங்க மாற்றுவழியில் சிந்திக்க அதற்கான




இலக்கிய வகையறாக்களில் பெண்ணியல்வாத இலக்கியம், எதிர்ப்பிலக்கியம், முற்போக்கு இலக்கியம், நவீன இலக்கியம், பின்நவீன இலக்கியம், மொழிபெயர்ப்பு இலக்கியம் என்பன குறிப்பிடத்தக்கன.

இந்த பார்வையில் தான் பன்மைத்துவ இலக்கியம், போர்க்கால இலக்கியம் இரண்டையும் நோக்க வேண்டும். இலக்கியம் சமூகத்தை பிரதிபலிக்கும் ஊடகம். இலக்கிய படைப்புகளின் அடியாக அல்லது ஊடாக சமூகத்தில் அதிர்வுகளையும் மாற்றங்களையும் நிச்சயம் உருவாக்கலாம். இலக்கியங்கள் மூலமாக சிந்தனைகளை மக்கள் மயப்படுத்தலாம் . எல்லா எல்லைகளையும் கடந்து சென்று எல்லா உலகங்களையும் உள்ளங்களையும் வென்றுவிடும் மர்ம, ஆகர்ஷன சக்தி இலக்கியத்துக்கு உண்டு.

அந்த வகையில் இலங்கையின் யுத்த கால சூழலில் வெளியான இருவேறு இலக்கியங்களில் இழையோடியுள்ள இருத்தலுக்கான போராட்ட உணர்வு, யுத்தத்தின் பாதிப்பு, விடுதலை உணர்வு, சுதந்திர தாகம், எதிர்ப்புணர்வு என்பன வெளிப்பட்டுள்ள பாங்குகளை ஒப்பிடும் வகையில் ரஸ்மினின் ஒப்பீடும் ஆய்வும் உள்ளன.

யுத்தத்தை, அதன் தாக்கத்தை, செல்வாக்கை சிங்கள மற்றும் தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு உள்வாங்கியுள்ளன? அவற்றின் மீது யுத்த சூழல் எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது? அதன் போக்கை செல்நெறியை திசை திருப்பியுள்ளன? என்பன இங்கு ஆழமாக நோக்கப்படுகிறது.

கல்வித்துறைக்கூடாக, கலைத்திட்டம் வாயிலாக, பன்மைத்துவ நோக்கில் இலக்கியங்களை பாடத்திட்டமாக அமைத்து கற்பித்தாலும் அது பரீட்சையை மையமாக கொண்ட உணர்விழந்த வரண்ட நிலையில் பிரக்ஞை அற்றதாகவே காணப்பட்டன. பிரதிகளில் படிந்துள்ள பிம்பங்களும் பாத்திரங்களும் நிஜ வாழ்வில் பிரதிபலிக்கவில்லை.தெறிப்படையவில்லை. சமூக மாற்றத்தில் தாக்கம் செலுத்தவில்லை. காரணம் சாதகமான இலக்கிய பிரதிகள் படைப்புகள் வெளிவந்தது போலவே இனவாதத்தை கக்கும் விசமத்தனமான படைப்புகளும் பிரதிகளும் மக்கள் மயப்பட்டன.

இந்த சூழலில் இலங்கை வாழ் சிறுபான்மை பெரும்பான்மை மற்றும் மும்மொழி பேசும் சகலரிடமும் இலக்கியம் வாயிலாக ஒரு சமாதானத்தை மாற்றத்தை உருவாக முனைந்திருக்கும் ரஸ்மினின் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டும்.

இந்த வகையில் இலக்கியத்தினூடாக இலங்கை சூழலை மையப்படுத்தி பன்மைத்துவ சிந்திப்பையும் புரிதலையும் பார்வையையும் ஏற்படுத்தும் நோக்கில் இந்த நூல் அமைந்துள்ளது எனலாம்.

இலக்கியம் வாயிலாக இந்த பன்மைத்துவ அங்கீகரிப்பை எவ்வாறு சாத்தியமாக்கலாம்? என்ற வினாவுக்கு நூலாசிரியர் இரண்டு வழிமுறைகளை குறிப்பிடுகிறார்.

இலக்கியங்களில் அயலவரின் வாழ்க்கை முறை, மொழி, பண்பாடு , கலாசார கூறுகள், சமூக உறவு, நம்பிக்கைகள்,என்பவற்றை பரஸ்பரம் உள்வாங்கி அவற்றுக்கான மதிப்பினையும் ஏற்புடைமையையும் ஊக்குவித்தல்.

இவற்றை மொழிபெயர்ப்பின் வாயிலாக அல்லது பரிமாற்றப்பொறிமுறை வாயிலாக சமூக மயப்படுத்தி முரண்பாட்டு நிலை மாற்றத்திற்கானஉரையாடலை ஊக்குவித்தல்.

நூலுக்கு மிகச்சிறந்த அணிந்துரை ஒன்றை பேராசிரியர் ஆ.யு.நூமான் அவர்கள் “இலக்கியமும் இன உறவும் – போர்க்கால சிங்கள இலக்கியங்கள்” பற்றிய சில குறிப்புக்கள் எனும் தலைப்பிற்கூடாக வழங்கியுள்ளார்.

யுத்தம் முடிவுற்றாலும் இனமுரண்பாடு இன்னும் முழுமையாக தீரவில்லை. இன நல்லுறவை ஏற்படுத்துவதற்கான சமூக, அரசியல் சூழல் இன்னும் உருவாகவில்லை. இந்த முரண்பாட்டு சூழலில் இலக்கியத்தின் பங்கு என்ன? அது இன முரண்பாட்டை ஊதிப்பெருப்பித்து அதற்கு தீனி போட்டு மெருகேற்றி விடுகிறதா? மோதலுக்கும் முருகலுக்கும் காரணமாகி விடுகிறதா? அல்லது சுமூகமான முறையில் சமாதன சூழலை உருவாக்கி இன நல்லுறவை கட்டி எழுப்பி வளர்க்க முனைகிறதா? என்ற கோணத்தில் மேற்படி நூல் ஆய்வு செய்வதாகவும் கூறுகிறார்.

இரண்டு பக்கங்களும் சரிசமனாக பயணித்துள்ளதை அவர் நூலுக்கூடாக சுட்டிக்காட்டுகிறார்.

முடிவுரையுடன் சேர்த்து எல்லாமாக 9 தலைப்புக்கள் நூலில் உள்ளடங்கியுள்ளன.

1. போர்க்கால சிங்கள இலக்கியம்.
2. சிங்கள – தமிழ் இலக்கிய உறவு
3. சிங்கள பாடலிலக்கியம் – அறிமுகம்.
4. சிங்கள பாடலிலக்கியம் – இரண்டாம் வாசிப்பு.
5. போர்க்கால சிங்கள கவிதைகள்.
6. போர்க்கால சிங்கள சிறுகதைகள்.
7. இனவுறவு கருத்து நிலையும் சிங்கள நாவல்களும்.
8. எதிர்நிலைக்கருத்தாக்கங்கள்.
9. முடிவுரை.

யுத்தத்தில் மிக நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் என்றவகையில் தமிழ் – இஸ்லாமிய இலக்கிய பகைபுலனில் எண்ணற்ற படைப்புகள் எதிரும் புதிருமாக வெளிவந்துள்ளன. இன நல்லுறவை வளர்த்தும் மேலும் சிதைத்தும் உள்ளன.

அதே போல தமிழ் சிங்கள இலக்கிய உறவின் வரலாறு மற்றும் போக்கு குறித்து மேற்படி நூல் மூலம் வாசித்து அறிந்து கொள்ளலாம்.



*பிரபுவே,*
*உங்கள் தினத்தில்*
*எல்லா மணிகளும்*
*மௌனமாய் உள்ளன*

*ஈராயிரம் ஆண்டுகளாக*
*அவைகள் ஒலித்தன*
*இடையறாதொலித்தன*
*ஆனால் இன்றோ*
*ஊமைகளாக்கப்பட்டன அவைகள்*

*எனது பிரபுவே,*
*வேதனைக்கு எதிராக*
*உலகின் கதவுகள் மூடிவிட்டன*
*உலகம் இறுகிப் பாறையாய்*
*விட்டது*
*சூரியனின் கண்கள்*
*தோண்டப்பட்டன*
*காணாமல் போயிற்று உலகம்*
*கிழிந்து சிதைந்தது உலகம்*

*எனது பிரபுவே*
*ஜெரூஸலத்தின் அவலத்தைக்*
*கழுவித் துடைக்க*
*இந்த உலகம்*
*ஒரு மெழுகுவர்த்தியைத்தானும்*
*உயர்த்தவில்லை*
*ஒரு துளிக் கண்ணீரைத்தானும்*
*சிந்தவில்லை*

*ஓ பிரபுவே*
*ஜெரூஸலத்தின் மகிமையே*
*இரவின் ஆழ்ந்த குழிகளில் இருந்து*
*துயரத்தின் மிக இருண்ட*
*கிடங்குகளில் இருந்து*
*ஜெரூஸலத்தின் புலம்பல்*
*உம்மிடம் வருகிறது.*

**பத்வா துகான் கவிதையிலிருந்து ஒரு பகுதி -**
**தமிழில் எம்.ஏ. நுஃமான்**

# பலஸ்தீன் – இஸ்ரேல் போர்: தீர்ப்பதற்காக தென்னாப்பிரிக்க அரசாங்கம் பாரிய முயற்சி



தற்போது பலஸ்தீனத்திற்கும் இஸ்ரேலிற்கும் இடையில் இடம்பெற்று வரும் போரினை பல்வேறு விதமான இராஜதந்திர முயற்சிகள் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இவ்வேளையில் தென்னாப்பிரிக்க அரசாங்கம் ஓர் பாரிய முன்னெடுப்பினை மேற்கொண்டுள்ளதென சோனக இஸ்லாமிய கலாச்சார நிலையத்தின் தலைவர் ஒமர் காமில் தெரிவித்துள்ளார்.

அவர் இலங்கைக்கான தென்னாப்பிரிக்க உயர்ஸ்தானிகர் ஸ ன்டில் எட்வின்சகிக்கிற்கு அனுப்பிய கடிதத்திலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

காசா மற்றும் பாலஸ்தீனத்தில் இனப்படுகொலையில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படும் இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய உங்கள் நாட்டினால் மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சிக்கு உங்களுக்கும் தென்னாப்பிரிக்க மக்களுக்கும் எங்கள் மனமார்ந்த ஆழ்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் எனக் கூறினார்.

காமில் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது அனைத்து அரபு மற்றும் முஸ்லிம் நாடுகளும் தென்னாப்பிரிக்காவின் நேர்மையான முயற்சிகளுக்கு ஏகமனதாக ஒப்புதலை வழங்கியுள்ளன, இனப்படுகொலை, நிறவெறி, போர்க்குற்றங்கள் மற்றும் காசா மற்றும் மேற்குக் கரையில் உள்ள பொதுமக்களுக்கு எதிரான ஏனைய அத்துமீறல்களை நிறுத்துவதற்கான தேவையினை உங்கள் மனு அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. சர்வதேச நீதிமன்றத்தின் முன் இஸ்ரேல் அரசாங்கத்தினை கொண்டுவருவதற்கான தென்னாப்பிரிக்காவின் அர்ப்பணிப்பு நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான அவர்களதுஅர்ப்பண சிந்தையினை உறுதிப்படுத்துகின்றது.

ஓர் நாகரீக உலகம் என்ற வகையில்உடனடி நீதிமன்றத் தீர்ப்புகளுக்காக ஆவலுடன் காத்திருக்கும் நிலையில், குறிப்பாக காசா மற்றும் மேற்குக் கரையில் உடனடி போர் நிறுத்தத்திற்கான அவசர அழைப்பின் பேரில், இந்த நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை நாங்கள் அங்கீகரிக்கிறோம் எனவும் கூறினார்.

இந்த சட்ட நடவடிக்கைகள் நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாப்பிரிக்கா எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்கு நியாயமான மற்றும் நியாயமான தீர்வு காண வழி வகுக்கும் என்பது எமது நம்பிக்கையாக உள்ளது என அவரது ஆதங்கத்தினை வெளிப்படுத்தினார்.

அதிமேதகு ஜனாதிபதியான நீங்களும், உங்கள் தலைமைத்துவமும், சர்வதேச அரங்கில் நீதியைப் பெறுவதற்கான உங்கள் நாட்டின் அர்ப்பணிப்பும் கவனிக்கப்படாமல் போகவில்லை.

தென்னாப்பிரிக்கா எடுத்துள்ள கொள்கை ரீதியான நிலைப்பாட்டை நாங்கள் பாராட்டுகிறோம், மேலும் இந்த நெருக்கடியான பிரச்சினைக்கு தீர்வு காண மேற்கொள்ளப்பட்டுள்ள இராஜதந்திர முயற்சிகளையும் நாங்கள் பாராட்டுகிறோம்.

பூமியில் உலவும் தலைசிறந்த தலைவர்களில் ஒருவரான திரு.நெல்சன் மண்டேலாவின் வார்த்தைகளுக்கு உண்மையாகவே, ”பாலஸ்தீனியர்களின் சுதந்திரம் இல்லாமல் நமது சுதந்திரம் முழுமையடையாது என்பதை நாங்கள் நன்கு அறிவோம்.”

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் 92 நாட்களுக்கும் மேலாக தொடரும் இனப்படுகொலையை நிறுத்துவதற்கு தென்னாப்பிரிக்கா எடுத்து வரும் நடவடிக்கைகளால் மேலும் நிரூபிக்கப்பட்ட இந்த உணர்வுகள் இன்றுவரை எதிரொலிக்கின்றன என்பதை அறிவது இதயத்தை பிளக்கிறது.

சர்வதேச நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் மற்றும் தென்னாபிரிக்க நடவடிக்கை தொடர்பான நடவடிக்கைகள் தொடங்கப்படுவதை சர்வதேச சமூகம் எதிர்நோக்கியுள்ளது எனக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்இந்த சட்ட செயல்முறைகள், நீடித்த போர்நிறுத்தத்தை உறுதிப்படுத்துவதற்கும் பிராந்தியத்தில் அமைதியை மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும் என்பது எங்கள் பகிரப்பட்ட அபிலாஷையாகும்.

மீண்டும் ஒருமுறை, நீதி மற்றும் மனித உரிமைகளுக்கான தென்னாப்பிரிக்காவின் அர்ப்பணிப்புக்கு எங்களது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த முக்கியமான சட்ட நடவடிக்கைகளின் முடிவுகளைக் காண ஆவலுடன் காத்திருக்கிறோம் எனவும் அவர் குறிப்பிடுள்ளார்.

## மனநலமும் ஆலோசனையும் 15

# மன உறவில் உடன்பாடு

எமது இயல்பான வாழ்க்கையில் நாம் எல்லாவற்றிலும் உடன்படாத சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கின்றன. கணவன் மனைவி உறவிலும் உடன்பட முடியாத விடயங்கள் இருப்பது சாதாரணமானது.

ஆனால் உடன்பாடு காண முடியாத விடயங்களின் போது அல்லது கருத்து வேறுபாடுகளின் போது நாம் நியாயமாகவும் மரியாதையுடனும் நடந்து கொள்வது மிக உயர்ந்த மனிதப் பண்புகளில் ஒன்றாகும்.

மனைவி ஏதேனும் ஒரு விடயத்தை சொல்லும் போது அந்த விடயத்தில் உடன்பாடு காண முடியாது என்று கருதினால் அந்த நேரத்தில் அவசரமோ, ஆவேசமோ, கோபமோ அடையாமல் மனைவியின் கருத்தை செவிமடுக்க மனதை உட்படுத்துவது கணவனின் உயர் குணத்தின் வெளிப்பாடாக இருக்கும். அவள் சொல்வது பிழையாக அல்லது பொருந்தாததாக இருந்தாலும் அந்த நேரத்தில் விரக்தியடைந்து அவள் கருத்து தெரிவிக்க வேண்டியதில்லை என்று சொல்வது அவளையே புறக்கணிப்பதாக ஆகிவிடலாம். அது சிலசமயங்களில் முரண்பாடுகளுக்கு வழிவகுக்கவும் காரணமாகலாம்.

மனைவி சொல்லும் விடயங்கள் அந்த சூழ்நிலைக்கு பொருத்தமில்லை என்று உணர்ந்தால் அந்த நேரத்தில் அமைதியாக கேட்டுவிட்டு நீங்கள் இருவரும் நல்ல மனநிலையில் இருக்கும்போது அவள் முன்வைத்த விடயங்கள் பற்றி அமைதியாக உரையாட ஆரம்பிக்கலாம். அப்படி உரையாடும் போது தனது கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளபடுகிறதோ இல்லையோ கலந்துரையாடலுக்கு தானும் உட்படுத்தப்படுவது பற்றிய ஒரு மகிழ்ச்சி அவளுக்குள் பிரதிபலிக்க ஆரம்பிக்கும்.

உடன்பட முடியாத நேரங்களில் சத்தமிட்டு, எடுத்தெறிந்து பேசி நான் சொல்வது தான் சரி என்று ஆணவமாய் நடப்பது கணவனுக்கும் நல்லதல்ல. மனைவிக்கும் நல்லதல்ல.

திருமண சிகிச்சையாளரும் ஆராய்ச்சியாளருமான ஜான் காட்மேன்...

கணவன் மனைவி கருத்து வேறுபாடுகளின் போது உடன்பாடு காணமுடியாத சந்தர்ப்பங்களின் போது ஒருவர் மற்றவரை கடுமையாக விமர்சனம் செய்வது, அவமதிப்பது, சண்டை பிடிப்பது போன்ற செயல்கள் திருமணத்திற்கு பயங்கரமான அச்சுறுத்தல்களாக அமைகின்றன என்று குறிப்பிடுகிறார். இந்த மோசமான செயல்களில் கணவன் மனைவி எவ்வளவு அதிகமாக ஈடுபடுகிறார்களோ, அவ்வளவு அதிகமாக அவர்கள் மனதலவில் தூரப்படவும் அல்லது உள் முரண்பாடுகள் உருவாகி விவாகரத்துக்கு செல்லவும் வாய்ப்புள்ளது என்றும் எடுத்துக் காட்டுகிறார். உடன்பட முடியாத சந்தர்ப்பங்களில் ஏற்படும் வாக்குவாதம் சிலசமயங்களில் அல்லது நீண்ட காலத்திற்கு நம்பிக்கை இன்மையை ஏற்படுத்தவும் செய்யலாம்.

அப்படியே உடன்பட முடயாத விடயங்களால் மனமுறிவு ஏற்பட்டால் உடனடியாக அல்லது அமைதியாக இருக்கும் நேரத்தில் ஒருவரையொருவர் மன்னிக்க முன்வர வேண்டும். இருவரும் இருவரை மனதார மன்னிக்கும் போது மனம் நெகிழ ஆரம்பிக்கும்.

எல்லோரும் தவறு செய்கிறார்கள். எங்கள் மனைவி சிலசமயம் எங்கள் உணர்வுகளைப் புண்படுத்தலாம் அல்லது எங்களை வருத்தமடையச் செய்யும் ஏதாவது ஒன்றைச் செய்யலாம், அது எங்களைக் கோபப்படுத்தலாம், ஆத்திரமடையச் செய்யலாம். ஆனால் அந்த நேரத்தில் எங்கள் உணர்வுகளைச் சமாளித்துக் கொள்வது முக்கியமாகும். அது எமது உள உடல் ஆரோக்கியத்துக்கும் குடும்ப நல்வாழ்வுக்கும் நன்மை பயக்கும்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் பல உடன்பாடுகளுடன் கணவனும் மனைவியும் சேர்ந்து ஒன்றாகக் கட்டியெழுப்பிய வாழ்க்கையை, அவ்வாறே கட்டாயம் கட்டியெழுப்ப வேண்டிய திருமண உறவை உறுதியாக வைக்க தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்பதை இருவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

மனைவியுடன் பிரச்சினைகள் அல்லது முரண்பாடுகள் ஏற்பட்டால் உணர்ச்சி ரீதியாகவும் அன்றாட செயல்பாடுகளிலும் இருந்து விட்டு விலகாமல் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்க வேண்டும். அப்போது மனைவியுடனான உறவு காலப்போக்கில் வளரவும் அழகாக மாறவும் அது காரணமாகலாம்.

இங்கு முன்வைத்த யோசனைகள் உங்கள் திருமணம் பல ஆண்டுகளாக வெற்றிகரமாக இருக்க உதவும் என்று எதிர்பார்க்கிறோம்.

மணவாழ்வு வளம் பெற பிரார்த்தனையும் செய்கிறோம்.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# கிண்ணியா ஜாயா வித்யாலயாலத்தில் சாரணிய இயக்கம் ஆரம்பம்



(கிண்ணியா கியாஸ் ஷாபி)

திருகோணமலை மாவட்ட சாரணிய சங்கத்தினால் கிண்ணியா ஜாயா மகளிர் மகா வித்தியாலய சாரண இயக்கத்தில் இணைந்து கொண்ட பெண் சாரணியர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் (16) நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எஸ். ரி. நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், திருகோணமலை மாவட்ட சாரணிய ஆணையாளர் சிங்காரவேல் சசிகுமார் கலந்து கொண்டு சாரணிய அணிகளுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வினை வழி நடத்தினார்.

இந்த வைபவத்தில் பாடசாலை அதிபர் உரையாற்றும் போது,

சாரணர் இயக்கம், உலக அளவிலான இளைஞர் இயக்கங்களில் ஒன்றாகும். உலக பேரியக்கங்களில் ஒன்றாகவும் இது திகழ்கிறது.

நாளைய குடிமக்களான இளைய தலைமுறையினருக்கு குழந்தைப் பருவத்தில் இருந்தே கீழ்ப்படிதல், பெரியோரை மதித்து நடத்தல் போன்ற நற்பண்புகளை வளர்க்கும் இயக்கமாக சாரணர் இயக்கம் தோன்றியது. ராணுவ கட்டுக்கோப்பு இளைய தலைமுறையினரிடம் வளர வேண்டும் என்ற நோக்கத்துடன் ராணுவ வீரரான பேடன் பவல், இந்த இயக்கத்தை செயல்படுத்தினார். எமது பாடசாலையில் இந்த இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு சகல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கிய மாவட்ட சாரணர் ஆணையாளருக்கு பாடசாலை சமூகம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் உடற்கல்வி ஆசிரியர் ஆலோசகர் என். அரபாத் மற்றும் கல்லடிவெட்டுவான் வித்தியாலய அதிபர் எம். எம். எம். முஸம்மில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில், இது 34 ஆவது சாரணிய குழுவாகும். கிண்ணியாவில் இரண்டாவது பெண் சாரணிய குழு என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விளக்கே நீ விளக்கு - நூல் வெளியீடு



கலாபூசணம் யோனகபுர ஹம்ஸாவின் “ விளக்கே நீ விளக்கு“ கவிதை நூல் வெளியீடு ,திக்குவல்லை மின்ஹாத் தேசிய பாடசாலை மஹ்மூத் மண்டபத்தில் 24.01.2024 காலை 9.00 மணிக்கு கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மஷாயிர் தலைமையில் நடைபெறும்.

(தி.க)




**பயாஸா பாஸில்**

# சின்ன வெங்காயம் பொரியல்



**தேவையான பொருட்கள்**

சின்ன வெங்காயம் -250 கிராம்
மிளகாய்த்தூள் - ஒரு டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு

**தாளிக்க:**

கடுகு - அரை டீஸ்பூன்
உ.பருப்பு - 2 டீஸ்பூன்
கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணெய் - 3 டேபிள் ஸ்பூன்

**அரைக்க:**

தேங்காய் துருவல் - ஒரு பிடி
சீரகம் - 1/2 டீஸ்பூன்

**செய்முறை:**

வெங்காயத்தை உரித்து கழுவி பொடியாக நறுக்கிக் கொள்ளவும். தேங்காயுடன் சீரகத்தை சேர்த்து கர கர என்று அரைக்கவும். கடுகு உ.பருப்பு கறிவேப்பிலை ஆகியவற்றை சேர்த்து தாளித்து அவை பொன்னிறமானதும் அதனுடன் வெங்காயத்தை சேர்த்து வதக்கவும். வதக்கிய வெங்காயத்தில் உப்பு , மிளகாய் தூள் சேர்த்து அரைத்து தேங்காயையும் போட்டு பிரட்டி இறக்கவும் சின்ன வெங்காயப் பொரியல் தயார்.

**மருத்துவ குறிப்பு:**

வெங்காயத்தை அரைத்து மோரில் கலந்து குடித்தால் இருமல் நீங்கும். குறிப்பாக உடல் சூட்டினால் ஏற்படும் வறட்டு இருமலுக்கு இது மிகவும் நல்லது. இரத்த அழுத்தத்தை குறைக்கும் வல்லமையும் வெங்காயத்திற்கு உண்டு.

# டிப்ஸ்...டிப்ஸ்... Beauty tips

- முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எழுமிச்சை சாற்றை தடவி வர வேண்டும். தினமும் இவ்வாறு செய்தால் முகம் அழகு பெறும்.

- தேநீர் வடிகட்டிய பின் , மிஞ்சும் தேயிலைத் தூளில் எழுமிச்சைச் சாற்றைப் பிழிந்து, தலியில் தேய்த்துக் குளித்தால் தலைமுடி பளபளப்பாகும்.

- பருமனாக இருப்பவர்கள் எடையைக் குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான நீரில் ஒரு மூடி எழுமிச்சைச் சாற்றை பிழிந்து அதனுடன் தேன் கலந்து கலந்து சாப்பிட்டால் எடை படிப்படியாகக் குறையும்.



## தழும்புகள் மறைய....



முகப்பருக்கள் வந்து மறைந்தாலும் அது வந்ததற்கான தடம் அப்படியே இருக்கும். பரு வந்து நீங்கிய இடத்தில் உள்ள பாதிப்படைந்த இறந்து செல்களை நீக்கினால் தான் தோலில் உயிரணுக்கள் புதிதாக உருவாகும். கற்றாழையில் கிருமிகளை அழிக்கும் தன்மை அதிகமாக இருக்கும். மேலும் இதில் தோலுக்கு தேவையான சத்துக்கள் நிறைந்துள்ளன.

இதில் உள்ள என்சைம் தோலுக்கு நெகழ்வு தன்மையை கொடுப்பதோடு பாக்டீரியா, ஃபங்கஸ் , அழுக்கு போன்றவற்றை நீக்கி தோலை சுத்தமாக்குகின்றது. கற்றாழை முகத்தில் தோன்றும் கடினத் தன்மை அழர்ச்சி போன்றவற்றையும் நீக்கும். தோல் வறட்டு தன்மையை அடையும் போது சருமத்தை சமநிலையில் வைத்துக் கொள்ளும் முகப்பருவால் தோன்றும் வீக்கத்தை குறைக்கும்.

# கிரிக்கெட் உலகம் ஆவலோடு எதிர்பார்துள்ள 9ஆவது ரி20
## உலகக் கிண்ணமும் அதற்கான காய்நகர்த்தல்களும்



அரபாத் பஹர்தீன்

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து நடாத்தும் 9ஆவது ரி20 கிரிக்கெட் உலகக்கிண்ண தொடரை முழு கிரிக்கெட் உலகமும் எதிபார்த்துக் காத்திருப்பதுடன் இத் தொடரில் பங்கேற்கவுள்ள நாடுகள் அனைத்தும் சம்பியன் மகுடத்தை இலக்கு வைத்து காய்நகர்த்தல்களை செய்து வருகின்றன.

கனவான்களின் விளையாட்டு என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் காலத்திற்கு ஏற்றால் போல் மாற்றம் பெற்று வருகின்றது. அதற்கமைய டெஸ்ட் மற்றும் ஒருநாள் என இருந்த கிரிக்கெட் போட்டிகள் காலப்போக்கில் 3 மணித்தியாலங்களில் முடிவை அறிய இருபதுக்கு இருபது (ரி20) போட்டிகளாக மாற்றம் பெற்று 8 உலகக்கிண்ணங்களை கடந்துள்ளது.

கிரிக்கெட் உலகம் எதிர்பாத்துள்ள 9ஆவது உலகக்கிண்ணம்

இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் ரி20 உலகக்கிண்ண தொடர் மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரை இவ் உலகக்கிண்ண தொடர் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.  அதிலும் குறிப்பாக 20 நாடுகள் பங்கேற்றிருக்க போட்டித் தொடரை நடாத்துவதன் காரணமாக அமெரிக்கா அணி முதன் முறையாக உலகக் கிண்ணத் தொடரில் நேரடியாகப் பங்கேற்கின்றது. அத்துடன் பப்புவா நியூ கினி உகண்டா போன்ற நாடுகளும் இத் தொடரில் முதன்முறை பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**உலகக்கிண்ண போட்டி அட்டவணை:**

இவ் உலகக்கிண்ண தொடரில் மொத்தமாக 20 அணிகள் பங்கேற்றிருக்க இவ் 20 அணிகளும் முதல் சுற்றில் ஒரு குழுவில் 5 அணிகள் வீதம் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய

**குழு - ஏ**

இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா, அயர்லாந்து, கனடா

**குழு - பி**

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நமீபியா, ஸ்கொட்லாந்து, ஓமான்

**குழு - சீ**

நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், ஆப்கானிஸ்தான், உகண்டா, பப்புவா நியூ கினி

**குழு - டீ**

தென்னாப்பிரிக்கா, இலங்கை, பங்களாதேஷ், நெதர்லாந்து, நேபாளம்

என்ற அடிப்படையில் அணிகள் குழு நிலைப் படுத்தப் பட்டுள்ளன.  அத்துடன் முதல் சுற்றில் ஒரு குழுவிலுள்ள அணி அதே குழுவிலுள்ள மற்றைய 4 அவர்களுடனும் ஒரு முறை போட்டியிடும். இவ்வாறு போட்டியிட்டு குழு நிலையில் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் 2ஆவது சுற்றுக்குத் தெரிவாகும்.

முதல் சுற்றின் முடிவில் 8 அணிகள் இரண்டாம் சுற்றில் களம் நுழைய அவ் 8 அணிகளும் 4 அணிகள் வீதம் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு அணி குழுவிலுள்ள மற்றைய 3 அணிகளுடன் போட்டியிடும். இவ்வாறு இரண்டாம் சுற்று இடம்பெறும்.

பின்னர் இடம்பெறும் முதல்  அரையிறுதிப் போட்டியில் இரண்டாம் சுற்றில் குழு ஏ இல் முதல் இடம் பிடிக்கும் அணியும் குழு பி இல் 2ஆம் இடம் பிடிக்கும் அணியும் மோதும். 2ஆவது அரையிறுதியில் குழு ஏ இல் 2ஆம் இடம் பிடிக்கும் அணியும் குழு பி இல் முதலாம் இடம் பிடிக்கும் அணியும் மோதி இறுதிப் போட்டிக்கு இரு அரையிறுதிகளிலும் வெற்றி பெறும் அணிகள் தெரிவாகும் வண்ணம் 9ஆவது ரி20 உலகக்கிண்ண போட்டி அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

**9ஆவது சம்பியன் கிண்ணத்தை இலக்கு வைத்த காய்நகர்த்தல்:**

9ஆவது ரி20 உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா ஆரம்பிக்க இன்னும் சில மாதங்களே எஞ்சியிருக்க இதில் பங்கேற்கும் அணிகளில் குறிப்பாக முன்னாள் ரி20 உலகச் சம்பியன்களான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் மட்டுமல்லாது இப்போதைய ரி20 போட்டிகளில் பிரகாசித்து வரும் நியூசிலாந்து, ஆப்கானிஸ்தான் சிம்பாப்பே போன்ற நாடுகளும் தொடராக ரி20 போட்டிகளில் பங்கேற்று வருகின்றது.

**சிம்பாப்பேயுடன் ரி20 தொடரை வென்ற இலங்கை:**

சுற்றுலா சிம்பாப்பே அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் இலங்கை அணி தொடரை 2:1 என வெற்றி கொண்டு 2024 ஆம் வருடத்தை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது. இத் தொடரைப் பொருத்த வரையில் இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவரும் அனுபவமிக்க சகலதுறை வீரருமான அஞ்சலோ மெத்யூஸின் மீள்வருகை இலங்கை அணிக்கு இத் தொடர் வெற்றியை கொடுத்தது என்றால் அது மிகையாகாது. குறிப்பாக இத் தொடரில் அதி கூடிய ஓட்டங்களை பெற்றவர் வரிசையில் மெத்யூஸ் 112 ஓட்டங்களுடன் முதலிடத்தில் உள்ளார். பந்துவீச்சில் இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.









மேலும் இலங்கையின் ரி20 அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட வனிந்து ஹசரங்க இத் தொடரில் மொத்தம் 7 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன் தீர்மானிக்க 3ஆவதும் இறுதியுமான போட்டியில் 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தி வெற்றிக்கு முக்கிய புள்ளியாகத் திகழ்ந்தார்.

அத்துடன் சிம்பாப்பே அணியைப் பொறுத்த வரையில் அதன் ரி20 அணித்தலைவரான சிக்கந்தர் ராசா இப்போதைய ரி20 போட்டிகளில் மிகச் சிறந்த சகலதுறை வீரராக முன்னேற்றம் கண்டு வருகின்றமை சிம்பாப்பே அணிக்கு மிகப் பெரிய சக்தியாக உள்ளமை குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டியது. மேலும் இலங்கை அணி அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான தொடரிலும் 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




**பலமிக்க இந்திய அணியை சீண்டிப் பார்த்த ஆப்கானிஸ்தான்:**

3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் இவ்விரு அணிகளும் மோதிய இருந்தன. இத் தொடரின் முதல் இரு போட்டிகளிலும் ஆப்கானித்தான் அணி சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தது. இருப்பினும் அனுபவமிக்க இந்திய துடுப்பாட்ட வீரர்கள் ஆப்கானிஸ்தான் பந்துவீச்சில் தடுமாற இளம் வீரர்களான சிவம் டுபே, திலக் வர்மா, ரிங்கு சிங் போன்றோரின் அதிரடியால் வெற்றிபெற்றிருந்தது இந்தியா.

பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற 3 ஆவது போட்டி கிரிக்கெட் ரசிகர்களுக்கு மிகப் பெரிய விருந்தாய் அமைந்து. இந்திய அணி நிர்ணயித்த 212 என்ற கடின இலக்கை விரட்டி 212 ஓட்டங்களை பெற்றது ஆப்கானிஸ்தான். பின்ன்ர சுப்பர் ஓவரில் 16 ஓட்டங்களை விளாசிய ஆப்கானிஸ்தான் அணியை விரட்டிய இந்தியா 16 ஓட்டங்களை பெற சுப்பர் ஓவர் சமநிலை பெற்றது. பின்னர் 2ஆவது சுப்பர் ஓவரில் 10 ஓட்டங்களால் இந்தியா வெற்றி கொண்டு ஆப்கானிஸ்தான் அணிக்கு வெள்ளையடித்தது.

குறிப்பாக இந்திய அணிக்கு எதிராக தொடரில் ஆப்கானிஸ்தான் அணியின் ரி20 தலைவரான ரஷீட்கான் சத்திர சிகிச்சை செய்து கொண்டமையால் விளையாட வில்லை என்பதுடன் அவர் அதிலிருந்து தேரி வருவதாகவும் அவ் அணி அறிவித்துள்ளது. மேலும் இவ் வருட ரி20 உலகக் கிண்ணத்தில் ஆப்கானிஸ்தான் அணி அரையிறுதிக்கு முன்னேறினாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.







**பாகிஸ்தானை அதிரடியால் மிரட்டும் நியூசிலாந்து:**

அதிரடிக்கும் வேகப்பந்து வீச்சுக்கும் பெயர் போன பாகிஸ்தான் அணி 5 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் பங்கேற்க நியூசிலாந்து சென்றுள்ளது. குறிப்பாக பாபர் அஸாம் அணித்தலைவர் பதவியில் இருந்து விலகிக் கொள்ள புதிய தலைவராக ஷஹீன் அப்ரிடி பொறுப்பேற்ற முதல் தொடராக இத் தொடர் அமைந்துள்ளது.

அப்படியிருக்க இதுவரையில் இரு அணிகளுக்கும் இடையில் 4 போட்டிகள் நிறைவு பெற்றிருக்க 4 போட்டிகளிலும் நியூசிலாந்து அணி அதிரடியில் மிரட்டி ஒரு போட்டி மீதமிருக்க தொடரை வெற்றி கொண்டுள்ளது. இத் தொடரைப் பொருத்த வரையில் பாகிஸ்தான் அணிக்கு துடுப்பாட்டத்தில் பாபர் அஸாம் முதல் மூன்று போட்டிகளிலும் அரைச்சதம் விளாசி ஆறுதல் கொடுத்துள்ளார். பக்கர் ஸமான் ஒரு போட்டியில் அதிரடி அரைச்சதம் கடந்து தனது இருப்பை உறுதிப்படுத்தியுள்ளார். மொஹம்மட் ரிஸ்வான் 4ஆவது போட்டியில் ஆட்டமிழக்காமல் 90 ஓட்டங்களைப் பெற்று நம்பிக்கை கொடுத்தாலும் ஏனைய வீரர்கள் மந்தமான துடுப்பாட்டத்தையே வெளிப்படுத்தி வருகின்றமை பாகிஸ்தான் அணியின் உலகக்கிண்ண சம்பியன் கனவுக்கு முட்டுக்கட்டையாக அமையலாம்.

அத்துடன் பந்துவீச்சு துடுப்பாட்டத்தை விட மிக மோசமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. அணித்தலைவரான சஹீன் ஷா அப்ரிடி தன் பங்கிற்கு ஓட்டங்களை கட்டுப்படுத்தி விக்கெட்டுக்களை சாய்க்கிறார். மறுபக்கம் ஹாரிஸ் ரௌப் விக்கெட்டை வீழ்த்தினாலும் ரன்களை வாரி வழங்குகிறார். இதே நிலை தொடர்ந்தால் பாகிஸ்தான் அணிக்கு இம் முறை உலகக்கிண்ணம் பயணம் முதல் சுற்றுடன் நிறைவு பெறலாம்.

மறுபக்கம் நியூசிலாந்து அணி அசுர வேகத்தில் வளர்ச்சி கண்டு வருகின்றது. அணியின் ஆரம்ப வீரர்களான பின் அலன், கொன்வே வில்லியம்ஸன் போன்றோர் அதிரடியில் மிரட்டுகின்றனர். முன்வரிசை விரைவாக வீழ்ந்தால் மத்திய வரிசையிலு வரும் மிச்சல் மற்றும் பிலிப்ஸ் ஆகியோரின் நிலைத்திருந்தது ஓட்டங்களை சேர்கின்றனர். பந்துவீச்சில் சௌத்தி , ஹென்றி, போர்க்கியூஸன் போன்றோர் வேகத்தில் மிரட்டுகினர். சுழலில் சான்ட்ணர், சோதி போன்றவர்களும் அணியின் வெற்றிக்கு துணை நிற்கின்றனர். இப்படி சகல துறையிலும் சிறந்து விளங்கும் நியூசிலாந்து அணி இம் முறை உலகக்கிண்ணத்தில் அரையிறுதிக்குத் தெரிவாக வாய்ப்புக்கள் மிக மிக அதிகம்.

எனவே எதிர்வரும் ஜூன் மாதம் முழுவதும் கிரிக்கெட் ரசிகர்களுக்கு சிறந்த தீனியாக இத் தொடர் அமையும் என்பதும் இவ் உலகக்கிண்ண தொடரில் ஏராளமான சாதனைகள் புதுப்பிக்கவும் எதிர் பாராத சில போட்டி முடிவுகள் கிடைக்கப் பெறும் என்பதும் நிச்சயம்.











இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.